R. No. "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

ஞாயிறுதோறும் வெளிவரும். வருடசந்தா உள் நாடு 3-0-0.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி. „ வெளி நாடு 5-0-0.

மாலை 1. ஈரோடு, பவ-ஹு ஆவணி-மீ 18-உ (2—9—1934) மலர் 2.


## இனம்! சந்தாதாரர்களுக்கு இனம்!

## அருமையான புததகங்கள் இனம்!

நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு செப்டம்பர் மாதம் 1-உயிலிருந்து அக்டோபர்1-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாரராய்ச் சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கைவல்யம் | | | 0-8-0 |
| இந்தியாவின் குறைபாடு | | | 0-8-0 |
| இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்) | | | 0-8-0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | | 0-8-0 |
| லெனினும், மதமும் | அணா | 4 | 0-8-0 |
| பொதுவுடமைத்தத்துவம் | „ | 3 | |
| போல்ஷ்விக் முறை | „ | 1 | |
| கடவுளும் பிரபஞ்சமும் | அணா | 4 | 0-8-0 |
| சோஷியலிசம் | „ | 3 | |
| இலங்கை உபந்யாசம் | பை | 6 | |
| சமதர்ம உபந்யாசம் | „ | 6 | |

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| | | காந்தி-கிட்டு | 0-1-0 |
| The Right of Temple Entry | Re. 1—0—0 | The Curx of the Indian Problem | Re. 1—0—0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பாதிரிகள் பிரமச்சரியம் என்னும் பெயரால் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்து செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மாணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்தைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

### மத புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கிறன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
ஈரோடு.



### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. 3—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.

விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள், பழைய மூடப்பழக்க வழக்கங்களையும் சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவு ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருடச் சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மனவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

# நரகம் எங்கே?

## வேறு உலகிலா, அல்லது இந்த உலகிலா?

அமெரிக்கப்பகுத்தறிவுச்சங்கப்பிரமுகர் தோழர் மார்ஷர் ஜே. காவின் அவர்களால் எழுதியதின்மொழிபெயர்ப்பு.

(மொழிபெயர்ப்பாளர் சி. நடராஜன்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

சாஸ்வதமான அபாயமான நரகம் இருப்பதை ஒப்புக்கொள்ளும் தத்துவம் ஒன்று தான் கிறிஸ்தவமதத்தின் முக்கியாம்சமாக இருந்து வருகிறது. கிறிஸ்தமதம் என்னும் கட்டிடத்திற்கு அதுதான் அடிப்படையாக இருந்து வருகிறது. நம்மை நரகிலிருந்து காப்பாற்ற கிறிஸ்து இறந்ததாகச் சொல்லப்படுகிறது. நம்மை நரகிலிருந்து காப்பாற்ற மதம் எல்லா காலத்திலும் முயற்சி செய்து வந்திருக்கிறது. இன்றும் முயற்சி செய்து வருகிறது. நாம் நம்புவதாக இருந்தால் மதப்படி கிறிஸ்து துஷ்டர்களை கடைசி தினத்தன்று "ஏ பாபிகளே என்னிலிருந்து பிரிந்து போங்கள் சைதானுக்கும், அவனது தூதர்களுக்கும் ஆளாகி ஆளாத்தீயில் அமிழ்ந்து போங்கள்" என்று சொல்லுகிறார்.

பண்டைய கிறிஸ்தவர்கள் வரப்போகும் நம்பிக்கையற்ற உலகத்தை நினைத்து வருத்தப்பட்டனர். இரண்டாம் நூற்றாண்டில் இருந்து வந்த பரிசுத்த பாதிரியான செயின்ட் டெர்டுலியன் என்பவரது வார்த்தைகளைக்கவனியுங்கள். "மன்னாதி மன்னர்களும், பிரகஸ்வதிகளும் மோக்ஷத்திற்குச்செல்லவும் இவர்களை நம்பியவர்கள் இருளில் சிக்கி தவிக்கவும், மாபெரும் தத்துவ சாஸ்திரிகள் தங்களது சிஷ்யர்களுடன் நரக தீயில் அமிழ்ந்து போகவும் நேரிடும் சம்பவத்தை நினைக்கும் போது நான் எத்தகைய குதூகலத்தையும், சந்தோஷத்தையும் சொல்லி முடியாது".

இந்தக் கன்மனம் படைத்த வார்த்தைகளிலிருந்து 'எத்தகைய கொடுமை வெளியிடப் படுகிறது என்பதைச்சிந்தியுங்கள். கிறிஸ்துவ மார்க்கத்தின் ஓர் பிரிவாகிய "பிரெஸ் பிடேரியன் "என்ற பிரிவின் ஸ்தாபகரான "ஜான் கல்வின்" என்பார் வீழ்ச்சியடைந்த மனித சமூகம் நரகத்தில் படும் துன்பத்தை, கொடுமையை வர்ணிக்கும் முறையைக் கவனியுங்கள். "கோபங்கொண்ட கடவுள் பயங்கர புயலினூடே தனது வலிமை பொருந்திய பராக்கிரமத்தால் எல்லையற்ற கொடுமையை உண்டுபண்ணி அதில் சிக்கியவர்கள் கடலில் மூழ்கி சாவதை இதனிலும் மேலாகக்கருதச்செய்வார்". ஆ! என்னே? மனித சமூகத்தின் பெரும் பகுதியார் இத்தகைய துன்பத்திற்கு ஆளாகின்றன என நம்பும் ஒருவன், தனது மதியற்ற நம்பிக்கையில் மாறுபட்ட "மைக்கேல் சர்விட்டஸ்" என்பானை தீயிட்டு எறித்த ஒருவன், பச்சிளம் குழந்தைகளுக்கும் இவ்வித நரக வேதனை உண்டெனச் சொல்வதில் ஆச்சரியபடுவதற்கொன்றுமில்லை.

உண்மையாகவே நாம் நமது குழந்தைகளுடன் இவ்வித மிருதுவான படுக்கையில் எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்கச் செய்யும் கடவுளின் கருணைக்கு வருந்தாது அன்பு செலுத்த வேண்டியது தான்.

எனவே நரகம் எங்குளது? இப்பூமியிலா? ஆம் பூமியில் தான். நாம் அறிந்த இப்பூமியில் தான். நாம் வாழும் இவ் வாழ்க்கையில் தான். இனி வரப்போகும் ஒரு காலத்தில் அல்ல இப்பொழுதே இங்கேதான்.

மரணத்திற்குப் பின் கற்பனு நரகமாகிய ஒன்றில் அவதியுறுவோம் என அல்லல்படும் ஆண் பெண் மனத்தில் தான் நரகம் இருக்கிறது. எவன் தனது மாறுபட்ட அபிப்பிராயங்களின் காரணமாய் நரக வேதனைக்கு ஆளாக்கப்படுவோம் என்ற பாதிரியாரின் பயமுறுத்தலுக்கு அஞ்சி மன்னிப்புக் கேட்கவும் முற்பட்டு நடுங்குகிறானோ, அவனது உள்ளத்தில் நரகம் இருக்கிறது. எந்தஒரு பெண்மணி குளிர் நிறைந்த பனி கால அதிகாலையில் எழுந்து கோவிலுக்குப் போகாவிட்டால் நரக வேதனையடைவோம் எனப் பயந்து கஷ்டத்தை பொருட்படுத்தாமல் கோவிலுக்குச்செல்கிறாளோ அவளுடைய இருதயத்தில் நரகம் இருப்பதுடன், நரக வேதனையையும் அனுபவிக்கிறாள். எந்த ஒரு பெண் தனது உள்ளம் ஒருப்படாத உன் மத்தரின் கேள்விகளுக்குப்பாவசங்கீர்த்தனத்தின் பெயரால் பதில் சொல்லி தனது கஷ்டங்களை ஒப்புக்கொள்கிறாளோ அவளுடைய அதுசமய நிலையே நரக வேதனைதான். ஆயிரக்கணக்கான உத்தமர்கள் தங்களது வாழ்க்கையில்மன்னிக்க முடியாத பெருங்குறைகளை செய்துள்ளதாகச்சிந்தனை செய்து கொண்டு மனோவேதனை அடைந்து வரும் அவர்களின் மனத்திலே நரகம் குடிகொண்டு யிருக்கிறது. பாதிரிக் கூட்டத்திலே அனேக ஆயிரம் உத்தமர்கள் தங்களுடைய வாழ்க்கையே வீணாய் விட்டதாக கருதுகின்றனர். அடியில் காணும் ஒரு தனி நபரின் சரிதையை கவனியுங்கள் அது அநேகமாக எல்லாருக்கும் பொருந்தக்கூடியதுதான். ஒரு சிறுவனிடம் அவனது உற்றாரும், உறவினரும் அவன் பாதிரியாக வருவானேயானால் அதனால் அவன் தனது வாழ்க்கையை கடவுளுக்கு அர்பணம் செய்த ஓர் பெரும் பாக்கியத்தையும், கீர்த்தியையும் பெறுவான் என போதித்தனர். இப்படி அடிக்கடி இதே விஷயத்தை செவியுற்ற அவ்வாலிபன் தனது களங்கமற்ற மனதிலே பாதிரியாவதென முடிவு செய்து கொண்டான். எனவே தனது பள்ளிப்படிப்பு முடிந்ததும் மத சாஸ்திரங்களைப் போதிப்பதற்கென பாதிரிகளால் நடத்தப்படும் ஒரு பள்ளியில் சேர்ந்தான் அனேகமாக அவனது வாலிபப்பருவம் அங்கு கழிந்தபின் அவன் பாதிரிப்பட்டம் பெற்றான். அதுசமயம் அவன் பெற்றிருந்த கல்வியின் அளவை பொது நோக்குடன் கவனிப்போமானால் அது மிகவும் குறைபாடுடையது என்று தான் கொள்ளல் வேண்டும். சாதாரண பள்ளிப் படிப்போடு, பாதிரிகளைப்பற்றியும், முனிவர்களைப்பற்றியும் ஒரு சிறிதும் மத தத்துவங்களைப்பற்றியும், அவனது மதத்தைப்பற்றிய ஒரு தலைபக்ஷமான ஒரு சிறு சரித்திரமும், மத சம்மதமாக தான் நடந்து கொள்ள வேண்டிய முறையையும் தான் இவன் அடைந்திருந்த கல்வி, அவன் உலகினைப்பற்றி கொண்டிருந்த அபிப்பிராயமெல்லாம் தனது மதக்கண்களால் கண்ட காக்ஷியின் முடிவே, அவன் மனித வர்க்கத்தின் பரிபூரண லெக்ஷியத்தை யடைந்த மனிதனாக ஓர் "பாதிரி"யையும், பெண்வர்க்கத்தின் பரிபூரண லெக்ஷியத்தை யடைந்த பெண்ணாக ஒரு "கன்னியாஸ்திரி"யையும் தீர்மானித்தான். மக்களோடு மக்களாய் இவ்வுலகில் வாழும் ஒருபெண்ணை நேசித்தல் என்ற எண்ணம் கொள்ளுதலே ஓர் பாபகரமான காரியமாக நினைத்தான். எனினும் தனது வாழ்க்கையில் பிரனது மனைவியாக இருந்து, இறந்து வெகுநாளான கன்னி மேரியிடம் தனது எல்லையற்ற அன்பை செலுத்துவது நியாயமான காரியமாகக் கருதிவந்தான்.

வருடங்கள் பல கழிந்தன. இவ்வாலிபப் பாதிரிக்குச் சற்று ஓய்வு கிட்டியது. தனது ஒரே மாதிரியான வேலையை தொடர்ந்து செய்து வருவதனால் உண்டாகும் வெறுப்பையும், களைப்பையும் போக்கிக்கொள்ள சில புத்தகங்களை வாசிக்கத் துடங்கினான். மெல்ல அறிவனும் செஞ்சுடர் அவனது உள்ளத்தைத்தாக்க ஆரம்பித்தது. எனவே அவனது மத சரித்திரத்தின் உண்மைகளை உணர ஆரம்பித்ததும் இம்மதம் மனித சமூகத்தின் சுதந்திர உணர்ச்சியை தடுக்கும் ஒரு சதிக்கூட்டத்தின் ஏற்பாடுகள் என்ற முடிவுக்கு வந்தான். விஞ்ஞான அறிவு அவனது மத நம்பிக்கைகளை ஒவ்வொன்றாக தகர்த்தது. உலகில் உள்ள பல் வேறு மூடநம்பிக்கைகளில் தனது மதமும் ஒன்று தான் எனக்கண்டான். மனித சமூகத்தின் அபிவிர்த்தியானது இயற்கையைக் கடந்த ஓர் வழியைப் பற்றியது அல்லவென்றும், இயற்கையோடு இயைந்ததுதான் என்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# பிரான்சில் நிர்வாண இயக்கம்.

(Navagar)

மேல் நாட்டுப் புலவர் ஒருவர், "அமெரிக்கா அளவற்ற கோடீஸ்வரர்களையுடையது, ஜெர்மனி வியப்புறும் விஞ்ஞானிகளையுடையது, இங்கிலாந்து இணையிலா ராஜ தந்திரிகளையுடையது, இந்தியா பெறுதற்கரிய பிரசங்கிகளையுடையது, பிரான்ஸ் கவின் பெறுகன்னிகைகளையுடையது" என்று மொழிந்துள்ளார். இப்புலவர் பெருமானின் மெய்மொழிப்படி பிரான்ஸ் அழகிய பெண் மணிகளை மட்டும் உடையதன்று. ஐரோப்பாவிலே அழகிய இயற்கைக் காக்ஷிகள் மலிந்த நாடு பிரான்ஸ் தேசமாகும். பிரான்ஸ் தேச மக்கட்கு இயற்கை வாழ்க்கையில் எப்பொழுதும் பிரியம் அதிகம். ஆண்களைவிட பெண்களே பெரிதும் இயற்கை வாழ்க்கையில் கண்ணும் கருத்தும் உடையவராயிருப்பவர். அதனாலே அந்நாட்டுப் பெண்களிற் பேரழகிகள் மலிந்துள்ளார் என்று இயற்கை வாதிகள் பலர் இயம்புகின்றனர். இயற்கைக் காட்சிகளை பிரான்ஸ் தேச அரசாங்கம் செயற்கை முறையால் அழகு படுத்திக் கண்டோர் கருத்தைக் கவரும் வண்ணம் பொலிவு படுத்தியுள்ளனர். இயற்கைக் காட்சிகள் செயற்கை முறையால் செம்மை படுத்தப்பட்டு சிறந்து விளங்கும் காட்சியைக்கண்டு களிக்க அந்நிய நாட்டு மக்கள் ஆண்டுதோறும் ஆயிரம் ஆயிரம் பேராய் வந்து பிரானஸில் தங்கிச் செல்வதால் அந்நிய நாட்டிலிருந்து பிரான்ஸ் தேசத்திற்குக் கோடிக்கணக்கான பவுன்கள் வந்து குவிவதை அரசாங்கம் கண்டு மேலும் மேலும் அந்நிய நாட்டுச்செல்வம் தங்கள் நாட்டில்வந்து தங்கும்படி இயற்கைக் காட்சிகள் பல செழிப்புற்று விளங்கும் வண்ணம் பிரான்ஸ் தேச சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

### இயற்கை வாழ்வு.

இயற்கை வாழ்வினால் எழிலுற்ற பெண்மணிகள் எளிதில் செயற்கை முறையாம் ஆடை அணிதல் என்னும் அநாகரிகப் பழக்கத்தை உதறித் தள்ளி நிர்வாண வாழ்வாம் இயற்கை வாழ்வே இன்ப வாழ்வு எனக்கண்டனர். கண்ட உண்மையை அனுஷ்டானத்திலும் கொண்டு வந்து விட்டனர். ஆரம்பத்தில் யாம் எடுத்துக் எடுத்துக் காட்டியபடி இந்தியா இணையற்ற வெறும் பிரசங்கியுடையது என்னும் முது மொழிக்கொப்ப இந்தியாவில் "இயற்கையே தெய்வம்" என இயம்புவோருமுண்டு; "இயற்கையோடியைந்த வாழ்வே இன்ப வாழ்வு" இயற்கை வாழ்க்கைக்கு எதிர்மாறாய் வாழ்வோர் எரிவாய் நரகிடை வாழ்வரை யொப்பர்" "இயற்கையை யோம்புங்கள்" என்றும் "இயற்கை னும் செந்நெறிப்படி வாழ்வு நடாத்தின் அதனால் இன்ப நிலை கூடும், பிறமுறைகள்செயற்கையின் பாற்படுவன, அவைகளால் உளல் நலன் கெடுவதோடு வாழ்வும் குலேந்து, வாழ்விற்பெற வேண்டிய இன்பத்தையும் இழக்க நேரிடுகின்றது" என்றும் இன்னும் இயற்கை வாழ்வைப்பற்றி அளவின்றிப் பேசுவர், எழுதுவர். ஆனால் ஒரு பெண் 3, 4 சட்டைகளையும், 15, 16 முழச்சேலையும் புனைந்து கொள்வதும் இயற்கை வாழ்வோ? அந்த இயற்கை வாழ்வால் உடல் உரம் பெறுமா? அந்த இயற்கை வாழ்வில் இன்பம் பெற முடியுமா? என்றால் ஒன்றும் பேசாது மௌனஞ்சாதிப்பர். மேனாட்டிலன்றோ நிர்வாண வாழ்க்கையெனும் உங்கள் இயர்கை வாழ்க்கையை நடத்துகின்றனர் என்று கூறினால் இரு செவிகளையும் இறுகப் பொத்திக் கொண்டு சிவ, சிவ எனச் செப்புகின்றனர். ஆனால் பிரான்ஸ் தேசமக்களோ இயற்கை வாழ்வில் இன்பமுண்டு என்று கண்டனர். எதிர்ப்பை எண்ணாது அனுஷ்டானத்தில் அனுஷ்டித்துக்காட்டி விட்டனர். இன்று ஜர்மனிக்கு அடுத்தபடி நிர்வாண இயக்கம் ஆதிக்கம் செலுத்திவருவது பிரான்ஸ் தேசமே யாகும்.

### நிர்வாணிகளின் தலைநகர்.

இயற்கை வாதிகளாகிய நிர்வாணிகள் தங்கள் ஆதிக்கம் மிகுந்த ஜர்மனி தேசத்தில் தங்கட்டு ஓர் தலை நகரம் நிறுவாது இயற்கை வளம்பல மலிந்த பிரான்ஸ் தேசததிலே தங்கட்கு ஓர் தலைமை ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொண்டனர். இவ்வாறு பிரான்சிலே தலைமை நகரத்தை ஏற்படுத்தியது அகில உலக நிர்வாண இயக்க (International Nudist Congress) செய்த முடிபேயாகும். இந்த நிர்வாணிகள் தலைமை நகர் பிரான்ஸ் தேச சர்க்காரின் தலை நகரமாகிய பாரிசிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள "சீன்" என்னும் ஆற்றங்கரை யோரத்திலுள்ள ஓர் அழகிய சிறு தீவு. இதன் பெயர் "பிசியோபலீஸ்" நிர்வாணிகளல்லாததோர் இத் தீவை "ஜல்டிமெடான்" என்றுகூறுவர். இப்பொழுது அங்கு சுமார் 2000க்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இங்கு மிகக் குளிர் பச்சை வாய்ந்த புற்கள்நிறைந்தகுகைகள் பலவுண்டு. அதுவே பிசியேர்லீஸ் நகரத்தின் நிர்வாணிகள் வசிக்கும் இயற்கையரங்கமாகும்,

### நிர்வாணக் கார்ப்பொரேஷன்

பிரஞ்சு ரிவைராவைச் சேர்ந்த லவாண்ட் என்னும் அழகிய தீவை பிரஞ்சு தேச அரசாங்கத்தார் நிர்வாணிகளுக்கென்றே ஒதுக்கி வைத்து விட்டனர். இங்கு வசிக்க நிர்வாணிகள் மட்டுந்தான் அனுமதிக்கப்படுவர். இப்பொழுது லிவாண்ட் நகரம் கார்ப்பரேஷனாகி விட்டடது. அந்நகரத்தை நிர்வாணிகளே நிர்வாகஞ் செய்து வருகின்றனர். ஓர் நிர்வாணியே நகரின் மேயராக இருந்து நிர்வகித்து வருகின்றார்- எல்லா நிர்வாகங்களையும் நிர்வாணமாகவே இருந்து செய்து வருகிறார். பிரான்ஸ் தேசத்திலுள்ள இதர நகர பரிபாலன சபைகளைவிட எல்லா விஷயத்திலும் இந்த நிர்வாணிகளின் நகர பரிபாலன சபை திறம்பட நடந்து வருகின்றது.

### இடையூறுகள்.

பிரான்ஸ் தேசத்தில் கத்தோலிக் பாதிரிகள் மிகுந்த செல்வாக்குடையவர்கள். அப் பாதிரிகள் பத்திரிகைகள் மூலமாயும், பிரசங்கங்கள் மூலமாயும், நிர்வாண இயக்கக்கொள்கைகளையும், அவர்களின் வாழ்க்கை முறையையும் பொய்யும்,புரட்டுமாய் எழுதியும், திரித்துக் கூறியும், இன்னும் பலவிதமான இடையூறுகள் புரிந்து வந்தும் ஒன்றுஞ் செய்ய முடியாது போனதுடன், நிர்வாண இயக்கம் வலுப்பெற்று வரவே அரசாங்கத்திலுள்ள சில சிறிய உத்யோகஸ்தர்களின் மூலம் போலீஸ்காரர்களை ஏவி பெருந் தொல்லைகள் விளைத்து வருகின்றார்கள் என்றாலும் அவ் வியக்கத்தின் தலைவர்களின் இடையறா உழைப்பின் பயனாய் பொது மக்களின் ஆதரவை தினே தினே அதிகம் பெற்று வருகின்றது. பிரான்ஸ் தேசம் பல அரசியல் புரட்சிகள் தோன்றச் செய்தது போன்று செயற்கை வாழ்வை ஒழித்து மக்கள் இயற்கை வாழ்வை எய்த பல புரட்சிகள் செய்யும் என்று பிரான்ஸ் தேசத்திய நிர்வாண இயக்கப் போராசிரியர்கள் கூறி வருகின்றார்கள்.

### இந்தியாவும், நிர்வாண இயக்கமும்.

பெயர் பெற்ற பிரஞ்சு நிர்வாண மருத்துவரான "வெர்னேனைப்" என்பார் "நிர்வாண இயக்கம் முதன் முதலில் தோன்றவேண்டிய நாடு இந்தியாவும், ஆப்ரிக்காவுமே என்றும், இந்தியாவின் இயற்கையமைப்பும், சீதோஷண ஸ்திதியும் அதற்காதரவாயிருக்கிற தென்றும், இந்தியாவின் சீதோஷண ஸ்திதிக் கேற்ப அந் நாட்டு மக்களிற் பெரும் பாலோர் முக்கால் நிர்வாணிகளே என்றும் திருவாங்கூர் ராஜ்யத்திலும் இன்னும் பல உஷ்ணப்பிரதேசமான கிராமப்பகுதியிலுமுள்ள பெண் மக்கள் அரைக்குமேல் ஆடையே அணிவது கிடையாதென்றும், ஆண்களோ வெனில் ஒரு சிறு துணியை (கௌபீனத்தை)க் கட்டிக்கொண்டு தொழில் புரிவதோடு தெருக்களிலேயும் அதே ஆடையுடன் செல்கின்றனர். என்றும் பெரும்பாலும் ஆண்கள் ஆறு குளங்களில் ஸ்நானஞ் செய்வதானால் கௌபீனத்தோடேதான் (முக்கால் நிர்வானமாய்த் தான்) ஸ்நானஞ் செய்கின்றார்கள் என்றும், நிர்வாணப்பிரசாரகர்கள் தங்கள் கண்களை இந்தியாவின் பக்கல் திருப்புவார்களாக" என்றும் கூறுகிறார்.

### நிர்வான இயக்கத்தின் தத்துவம்.

நிர்வாணவாழ்க்கையால் காற்றும், வெளிச்சமும் உடலில் நன்றாய்ப்பட்டு உடல் நல்ல பலமடைகிறது. தேகம் இயற்கையான அழகிய நிறத்தை யடைகிறது. இதனாலே நிர்வாண தத்துவ முணர்ந்தோர் இந்தியர்களின் நிறம் இயற்கை நிறம் என்றும் இந்தியர்களைப்போன்ற நிறத்தையுடைய மக்களே அழகையுடைய மக்கள் என்றும் இயம்புகின்றார்கள். ஐரோப்பியர்களின் வெள்ளை நிறத்தின் மேல் வெறுப்புறுகின்றார்கள். செடி கொடிகள் தனக்கு இயற்கையில் இருக்கவேண்டிய பச்சை நிறமானது காற்று உஷ்ணப்படாது வெளிறிப்போய் இருப்பது போன்று ஐரோப்பியர்கள் உடலில் காற்று வெளிச்சம் படாது இயற்கை நிறம் பெறாது இருக்கின்றனர் என்றும் இயம்புகின்றார்கள். ஆடைகளை இறுக அணிவதால் உடலெங்கும் இரத்த ஓட்டம் சரியாய் ஓடாமல், வியர்வை நீர் ஆடைகளில் படிந்து திரும்பத் திரும்ப உடலிலே பட்டுபல வித சர்மரோகங்களை உண்டாக்குகிறது. அவயவங்களை நன்றாய் மூடிவைப்பதினால் ஆண் பெண்களை அதைப்பார்க்க வேண்டுமென்று ஓர்வித மூடப்பைத்தியங் கொண்டு திரிவதும் நிர்வாணவாழ்க்கையால் ஒழிவதுடன் மித மிஞ்சிய போக இச்சையும் மாறும். பெண்மக்கள் கண்ணைக்கவரும் பகட்டான ஆடைகளையணிந்து ஆண்களின் மனதைக்கவரும் கொடுஞ்செயலும், வீணை ஆடம்பரச்செலவும் அறவே யொழியும் என்பதே இந்நிர்வாணிகளின் தத்துவமாகும்.

### நிர்வாணிகளின் ஆத்மீக தத்துவம்.

பிரான்ஸ் தேசம் பெரிதும் கத்தோலிக்கர்களுடைய நாடு எனவே அங்குள்ள நிர்வாண இயக்கத்திலும் பெரும்பாலும் மதபக்தியுள்ள கத்தோலிக்கர்களே இருந்து வருகின்றார்கள். அவர்கள் வேதத்திலும், கடவுளிலும், ஆத்மாவிலும் நம்பிக்கையுடையவர்களே. கத்தோலிக்கர் மதத்தில் கூறப்பட்டுள்ள பல வேதவாக்கியங்கள் மூலம் கத்தோலிக் மதமே ஓர் நிர்வாண இயக்கமென்று தக்க ஆதாரங்களுடன் கூறிவருகின்றார்கள். பகுத்தறிவு இடங்கொடுப்பின் அத்தகைய ஆதாரங்கள் மலிந்த "நிர்வான வாழ்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# சைனாவில் பொதுவுடமை கொள்கை ஸ்தாபனம்.

கூலிகளுக்கும், விவசாயிகளுக்கும், பாட்டாளிகளுக்கும் கொண்டாட்டம்.

சீனாவிலிருந்து வரும் செய்தி தெளிவாக இல்லை. பூச்சௌ துறைமுகத்தின் மீது சீன சோவியத் படைகள் படையெடுத்துச் சென்றதையும், தங்கள் தேசத்தினரைப் பாதுகாக்கும் பொருட்டு பிரிட்டீஷ், அமெரிக்கா, ஜப்பான் துப்பாக்கிப் படகுகள் அங்கு விரைந்து சென்றதையும் பற்றி தந்திகள் கிடைத்ததற்குப் பிறகு ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. சீன சோவியத் படையைப் பற்றிய விவரங்களை நேரில் அறிந்துகொண்ட ஒருவர் எழுதிய கட்டுரையொன்று லண்டன் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது. அக்கட்டுரை கூறுவதாவது:

கொமின்டாங்குக்கு வெற்றியேற்பட்டதாகச் செய்திகள் கிடைத்திருந்தாலும், உண்மையாகவே சீன சோவியத் படைக்கு எங்கும் வெற்றி ஏற்பட்டிருக்கின்றது. கடற்கரையிலிருக்கும் புகீன் துறைமுகம் முதல் உள் நாட்டிலுள்ள ஷீச்வான் வரை சோவியத் படை ஜெயக்கொடி நாட்டியிருக்கின்றது.

புகீனுக்கு வடகிழக்கில் கடற்கரை ஓரத்தில் இருக்கும் ஏழு ஜில்லாக்களில் சோவியத் ஆட்சி ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. ஆகையால் ஜெயிக்கப்பட்ட ஜில்லாக்களின் வடக்கில் இருக்கும் புகீனுக்குத் தலைநகராக இருக்கும் பூச்சௌ என்ற நகரத்துக்கு அபாய நிலைமை ஏற்படுகின்றது. இப்பொழுது சோவியத் அதிகாரத்திலிருக்கும் ஜில்லாக்கள் மிகவும் அவசியமான பிரதேசத்தில் இருக்கின்றன. கிழக்கே அவைகள் ஒரு சங்கிலிபோல் தொடர்ச்சியாக இருக்கின்றன. வடக்கே அவைகள் சேகியாங் மாகாணத்துடன் சேர்ந்திருக்கின்றன. மேற்கே புகீனின் வடக்குப் பிரதேசம் முழுவதற்கும் வாயிலாக இருக்கின்றன பூச்சௌமீது தெற்கு நோக்கிப் படை எடுப்பதற்கு அவைகள் முக்கியமானவைகளாக இருக்கின்றன.

சென்ற வருடம் புவான் ஜில்லாவில் ஒரு ஸ்தல புரட்சிக் கமிட்டி நிறுவப்பட்டது. அந்த ஜில்லாவிலும், பக்கத்து ஜில்லாக்களிலும் விதிக்கப்பட்டிருக்கும் வரிகளையும், தீர்வைகளையும் எதிர்த்துப்போராட வேண்டுமென்பதே அக்கமிட்டியின் நோக்கம். இந்த ஜில்லாவில் சோவியத் அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கு இக்கமிட்டியே காரணமாகஇருந்தது.

### புதிய ஏழு ஜில்லாக்கள்.

சுவோலின், யூடின், ஷியாபு, புவான், லின்டே, லோயீன், லெயின்சியாங் என்ற புதிய ஏழு ஜில்லாக்களிலும் பதினாயிரம் பொதுவுடமைக்காரர்கள் அடங்கிய படை இருக்கின்றது. 60,000 விவசாயிகள், செம்படவர்கள் முதலியவர்களுக்கு அதிகமாக சண்டையில் கலந்து கொண்டனர். பொதுவுடமைக்காரர்கள் பல படைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு படையிலும் 700 பேர் இருக்கின்றனர் தோழர் சென்டைபங் என்பவர் சேனாதிபதியாக இருக்கின்றார். ஆயுதங்களுடன் கூடிய மூன்று கப்பல்களும் 70 பெரிய ஆயுதப் படகுகளும் இருக்கின்றன. பொதுவுடமைக்காரர்களுக்கு ஆயுதங்களும் வெடிமருந்தும் சப்ளை செய்ய இரு வெடிமருந்து தொழிற்சாலைகள் வேலை செய்து வருகின்றன. சண்டையில் கலந்துகொண்ட விவசாயிகளும், செம்படவர்களும் இப்பொழுது இரண்டாம் (பின்புற) படையாகக் கருதப்படுகின்றனர். அவர்களுக்கு நவீன ஆயுதங்கள் கிடையாது. பழைய காலத்துத்துப்பாக்கிகளையும், ஈட்டிகளையும், கத்திகளையும் அவர்கள் உபயோகிக்கின்றனர்.

இப்பெரிய படையைத் தவிர தோழர் ஹூவா ஹிஸ்யு இன் தலைமையில் அரசியல் பாதுகாப்பு படையொன்று இருக்கின்றது. ஜில்லாக்களில் நடைபெறும் போராட்டங்கள் பெரிதாகிக் கொண்டு வருகின்றன. பூச்சௌக்குத் தெற்கிலும், அதற்கு பக்கத்திலும் மிங்கியாங் நதி முகத்துவாரத்திலும் இருக்கும் சாங்லோ என்ற கடற்கரை ஜில்லாக்களிலும் போராட்டம் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது.

### பொதுவுடமைக் காரர்களுக்கு வெற்றி.

புகீனுக்கு வடக்கிலுள்ள புட்சோயன் ஜில்லாவில் தோழர் பாங் கேமியன் தலைமையில் ஒரு பொதுவுடமைப்படை இருக்கின்றது. சீன நடுத்தர மக்களும், ஏகாதிபத்ய சர்க்கார்களின் உதவியின் பேரில் பொதுவுடமைக்காரர்களை எதிர்த்து வந்த போதிலும் பொதுவுடமைச் சேனைகளுக்கும்; சீன சோவியத் குடியரசுக்கும் வெற்றிக்குமேல் வெற்றி ஏற்பட்டு வருகின்றது. அதிக பலம் பொருந்தியவர்களும், தற்கால ஆயுதங்களுடன் கூடியவர்களுமான எதிரிகளை எதிர்த்துப் பலமாக போராட்டம் நடைபெற்று வருகின்றது.

# ஹெர்நான்டா கோர்ட்டீஸும் மெக்ஸிகோவும்.

(நாகை என். பாலசுப்பிரமணியம்)

மெக்ஸிகோ என்பது வட அமெரிக்காவின் தென் கோடியில், அதாவது மத்திய அமெரிக்காவின் சமீபத்திலுள்ள ஒரு பீட பூமி. நிரக்ஷ ரேகையினின்றும் வடக்கே 19—30 வரை பாகையிலும், கிரீன்விச்சிலிருந்து மேற்கே 99 வது பாகையிலும் அது இருக்கிறது. இந்த விடத்தை பதினாறும் நூற்றாண்டில் கோர்நான்டா கோர்ட்டீஸ் என்பவன் கண்டான். அதை ஜெயித்தான். மெக்ஸிகோவின் சரித்திரத்தை எழுதுவதற்கு, வில்லியம்-எச்- பிர்ஸ்காட் என்பவர் கி. பி. 1838 ம் வருடம் ஆரம்பித்து, அதற்குப்பின் ஐந்தாம் வருடம் முடித்தார்.

மெக்ஸிகோவின் முழு சரித்திரத்தையும் நமது வாலிபர்கள் அறிய வேண்டுவது அத்யாவஸியமே யாயினும், பெருக்கமஞ்சி, விசேஷமாக நாம் பார்க்க வேண்டியவற்றை மாத்திரம் பின்னால் கூறுகிறோம்.

மெக்ஸிகோவின் இயற்கை வளம், சீதோஷ்ண ஸ்திதி, விலைபொருள், சந்ததிகள், ஆஸ்டெக் ஜாதியாரின் ஆக்ஷி, அவர் தம் பெருந்தன்மை, படைவகுப்பு, சட்ட நிலைமை, வான சாஸ்திரம், கணித சாஸ்திரம், முதலியவைகளைப்பற்றி நாம் படிப்போமானால் ஆச்சரியப்படுவோம். அவர்கள் தம் நாகரீகங்கள் எல்லாவற்றிலும் மத அமைப்பு தான் வெகுவாக ஆச்சரியப்படத்தக்கதாயுள்ளது. ஆதலின், அதனை ஈண்டு கவனிப்போம்.

### மதமும், மதேய அதிகாரமும்.

மெக்ஸிகர்களின் மதாதிக்கத்தைப்பார்ப்போமானால்; வருந்தாமலும், வியப்புறாமலும் இருக்க முடியாது தான். மத குருக்கள்களோ அங்கு அளவிறந்து காணப்பட்டனர். முக்கியமான கோவில் ஒன்றின் தலைமையின் கீழ் சுமார் ஐயாயிரம் மத குருக்கள் அதிகாரம் செலுத்தி வந்ததாகத் தெரிகிறது. மேற்கண்ட அவர்களது உத்தியோகங்களும், ராங்கிகளும், அங்கு சரியாகத்தெரிந்தெடுக்கப்பட்டன. முதல் தரமான சங்கீதப் பயிற்சி பெற்றவர்கள் பஜனைக் கோஷ்டியாரின் நிர்வாகத்தைப் பெறுவாராயினர். சிலர், கோவிலின் திருவிழா, மகோற்சவம், பிரமோற்சவம், முதலியவைகளைச் சரியாகப் பஞ்சாங்கங்களில் கணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். கல்வியிலாகாவைக் கண்காணித்துவர ஒரு சிலர் அமைந்திருந்தனர். மற்றுஞ் சிலர், விவசாயம்,வியாபாரம் முதலியவை சம்மந்தமான தொழிலின் நிர்வாகத்தை ஏற்றிருந்தனர். எல்லா ராங்கியையும் விட நரபலி கொடுப்பவனுக்கிருக்கும் ராங்கியே பெரிதாக அங்கு மதிக்கப்பட்டு வந்தது. மேற்படி எல்லா வித மத அமைப்புகளுக்கும் தலைவர்களாக இரண்டு குருமார்கள் நியமிக்கப்பட்டனர். தலைமை ஆசாரியர்கள் இருவரையும் தேர்ந்தெடுப்பவர் அரசனும் பட்டம் பெற்ற தனவந்தர்களுமே யாகும். அப்படித் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் பிறவி இலட்சணம் உடையவராக இருக்கவேண்டுமென்பதல்ல. பரம்பரையாகத் தலைமை ஆசாரியர்களாக விருந்த குடும்பத்தாராயிருக்க வேண்டுமென்பது மில்லை. இயற்கையிலேயே நற்குண முடையவராயும், நல்லொழுக்க முடையவராயும், கல்வியிற் தேர்ந்தவராயும், இருப்பவர்களே தலைமை ஸ்தானத்திற்கு அருகதை யுடையவரென்பதாகக் கருதப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஆசாரியர்களுக்கு ஒப்பான கௌரவமும் மதிப்பு முடையவர்கள் வேறொரு வருமே இல்லை. பிரஜைகள் விஷயத்தில்— முக்கியமான சமாச்சாரங்களில், தலைமை குருவின் யோசனையை அலட்சியஞ் செய்து காரியத்தை நடத்தும் அரசன் ஒருவனே அந்தத்தலைமை குருவுக்கு ஒவ்வொப்படுவான்.

ஆசாரியர் ஒவ்வொருவரும் குறித்த தொரு தெய்வத்திற்குத் தொண்டு செய்து வந்தனர். கோவிலின் சுற்றெல்லைக்குட்பட்ட விடத்தில் விசாலமான விடுதிகளை அவர்கள் பெற்றிருந்தனர். விவாஹம் செய்து கொள்ள அநுமதிக்கப்பட்டிருந்தார்களென்பது குறிப்பிடத்தக்க விஷயம். அவர்களது மேற்படி விடுதி மதேய அதிகாரம் நிறைந்ததாகவும், மதப்பயிற்சிக்குத் தக்க முறையிலும் அமைந்திருந்தது. பிரதிதினமும், பகலில் மூன்று வேளையும் இரவில் ஒரு முறையும், குருமார்கள் கடவுள் வழிபாட்டிற்காகக் கூப்பிடப்பட்டனர். நமது தேசத்தைப்போல ஆறுகால பூசை இல்லை போலும்! அவர்களுக்கு உறங்குங்காலம் மிகக் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அன்றியும், அடிக்கடி நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டனர். ஜனங்கள் இழைக்கும் சிறு பாவங்களுக்காக அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதுண்டு; சில சமயம் தம் சதையில் ஒரு பாகத்தை யறுத்து பலி கொடுப்பார்கள். (Aloe) 'அல்லோ, என்ற தாவர வர்க்கக் குச்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# Decameron of Boccaccio.

# "டெக்கமாரன்"

அல்லது

# விகடக்கதைகள்.

:0:

(மொழிபெயர்ப்பாளர் தோழர் உடுமலை கனகராஜன்)

2.

லிங்கியானு பிரதேசத்தில் கிறிஸ்தவ சந்நியாசிகளின் மடம் ஒன்று இருந்தது. அம்மடத்தில் வாலிப சந்நியாசி ஒருவர் இருந்தார். அவரது ஆசார அனுஷ்டானங்களும், பிரார்த்தனைகளும் தெய்வ பயங்களும் எல்லாம சேர்ந்தும் அவரது வாலிபத்தன்மையின்—உணர்ச்சியைத் தனிக்கவோ, அடக்கவோ செய்ய முடியவில்லை. ஒரு நாள் அச்சந்நியாசி தனிமையான ஓரிடத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் ஓரழகிய இளம் பெண்ணைக் கண்டார். அவள் தன்னருகே வசித்து வந்த ஓர் குடியானவன் மகள். கால நேரத்தில் அழகிய நங்கையைத் தனியேகண்ட இளஞ் சந்நியாசிக்கு தந்நிலைமைக்கு ஒவ்வாத காம இச்சை ஏற்பட்டு விட்டது. என்ன செய்வார்? அவளையணுகினர். புன்சிரிப்புடன் கொஞ்ச ஆரம்பித்தார். அப்பெண்ணும் இணங்கினள். அவ்வளவுதான் தாமதம் உடனே அவர் மற்ற சந்நியாசிகள் எழுந்திருக்குமுன் அப்பெண்ணைத்தனது அறைக்கு அழைத்துச் சென்றுவிட்டார். பின் அங்கு என்ன நடக்கும்? கேட்கவேண்டுமா? இருவரும் சந்தோஷமாக குலவிக்கொண்டிருக்கையில் அவ்வழியே சென்ற (Abbot) தலைமை மடாதிபதி அறையினுள்ளே பெண்குரல் கேட்பதை சற்று நின்று கவனிக்கலானர். நடக்கும் விஷயம் இன்னது என்பதையும் தெரிந்து கொண்டார். வெளியே காலடி சத்தம் கேட்பதை அறிந்த உள்ளே இருக்கும் வாலிபச் சந்நியாசி சந்தேகித்து மடாதிபதி தனது நடத்தையைத் தெரிந்துகொண்டார் என்பதாக முடிவு செய்துகொண்டு தான் தண்டனையடைவது நிச்சயமென்று பயந்து நடுங்கினர். ஆனல் தன் பயத்தைப் பெண்ணினிடம் காட்டிக்கொள்ளாமல் அவளை அங்கேயே படுத்திருக்கும்படியும், தான் திரும்பி வந்து ஒருவருமறியாமல் அழைத்துச் செல்வதாயும் சொல்லி அறையைப் பூட்டிவிட்டு சென்றுவிட்டார். சாவியை வழக்கப்படி மடாதிபதியிடம் கொடுத்துவிட்டு தான் விறகு கொண்டுவரப் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

அவர் வெளியே சென்றவுடன் மடாதிபதி இவ்விஷயத்தைப் பற்றி யோசிக்கலானர். எல்லா சந்நியாசிகளின் முன்நிலையில் கதவைத்திறந்து அவ்வாலிபச் சந்நியாசியின் பேரில் குற்றம் சாட்டலாமென்று முதலில் நினைத்து, பிறகு பலபேர்களுக்கு முன் ஓர் பெண்ணை அவமானபடுத்தக்கூடாது என்று எண்ணி தானே நேரில் அப்பெண்ணை விசாரிக்கலாமென்று தனிமையில் அவ்வறையைத்திறந்து உள்ளே சென்று கதவை தாளிட்டு அப்பெண்ணினருகே சென்றார். அப்பெண் இவர் யாரோ வேறு ஒருவர் வருகிறாரே என்று கருதி கலக்கமுற்றாள். அப் பெண்ணின் அழகையும், இளமையும் கண்ட மடாதிபதி வயோதிகராயிருந்தும் கூட அவ்வாலிபச் சந்நியாசியைப் போலவே அவள்மீது இச்சைகொள்ள வேண்டியதாயிற்று. பிறகு கீழ் வருமாறு யோசிக்கலானர். "இவளோ அழகிற் சிறந்தவளாயிருக்கிறாள். நாம் தினமும் கஷ்டங்களினுலும், பிளேக் என்னும் கொள்ளை நோயாலும் மக்கள் மடிவதை பார்க்கிறோம்; சமயம் வாய்த்த பொழுது கூடுமானல் நான் என் இவளோடு சுகித்திருக்க முடியாது; ரகசியத்தில் செய்யும் குற்றம் பாதி மன்னிப்பைப்பெற்றதாகும். இது போல மறு சமயம் வாய்ப்பதறிது, ஆகவே வாய்த்த சந்தர்ப்பத்தை வீணுக்க கூடாது" என்று ஈருதினர். இவ்வுறுதி கொண்ட மடாதிபதி உடனே அவளை நெருங்கினர் இதமான வார்த்தைகளைப் பேசினர் அவளைத் தனது இச்சைக்கு இணங்கும்படி செய்துவிட்டார். உடனே கட்டித்தழுவி ஒரு முத்தமுமிட்டார். இவர் கொஞ்சம் வயோதிகராயும், பருத்த தேகம் படைத்தவராயும் இருந்தபடியாலும்; அவள் மெல்லிய தேகம் படைத்த சிறு இளம் பெண்ணாயிருந்த படியாலும் இவர் அவளுடன் கூட ஓர் நூதன முறையை அனுஷ்டிக்க வேண்டியதாயிருந்தது.

இந்நிகழ்ச்சிகளை விறகு கொண்டு வருவதாகச் சென்ற வாலிப சந்நியாசி மடாதிபதிக்கு தெரியாமல் மறைந்து பார்த்துக் கொண்டிருந்தார். உள்ளிருந்த அம்மடாதிபதி இதை அறியாது வெளியே வந்து முன் போலவே கதவைப் பூட்டிவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றுவிட்டார்.

வாலிப சந்நியாசியைத் தண்டித்துவிட்டால் அவளைத் தானே ஏகபோகமாய் அனுபவிக்கலாமென்று நினைத்து அவரைக் கூப்பிட்டு அவரது நடத்தையைக் கண்டித்து அவருக்கு சிறை தண்டனை விதித்தார். அவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு "அன்புள்ள பிதாவே! தாங்கள் எனக்கு பிரார்த்தனைகளைப் பற்றியும், விரதங்களைப்பற்றியும் போதித்திருக்கிறீர்களே தவிர பெண்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்களுக்கு நாம் அடிமையாயிருக்க வேண்டுமென்பதையும் சொல்லவில்லை. தாங்கள் இப்பொழுதுதான் பெண்களுக்கு கீழ் படிந்திருக்க வேண்டுமென்பதை நேரில் காட்டியிருக்கிறீர்கள். இந்தத் தடவை என்னை மன்னிப்பீர்களானல் இனிமேல் தாங்கள் நடந்து கொண்டதை நான் பார்த்த படியே நானும் நடந்து உங்களைப் பின்பற்றுகிறேன்" என்று விநயமாகச் சொன்னன்.

தான் ரகசியமாய்ச் செய்ததை வாலிப சந்நியாசிப் பார்த்துவிட்டான் என்பதை யறிந்த மடாதிபதி அவன் செய்த குற்றத்தையே தானும் செய்திருப்பதால் அக்குற்றத்திற்காக அவனைத் தண்டிக்க வெட்கப்பட்டு, அவனை மன்னித்து விட்டார். அதன் பின் அவ்விரு சந்நியாசிகளுமே வெகு நேசத்துடன் அப்பெண்ணை காதலித்து வந்தார்கள்.

# இந்திய சட்டசபை தேர்தல்.

## டாக்டர் வரதராஜலுவுக்கு ஆதரவு.

ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் அறிக்கை.

### வாக்காளர்கள் கடமை.

அடியில் கண்ட வட ஆற்காடு ஜில்லாபோர்டு அங்கத்தினர்கள் பின்வரும் வேண்டுகோளில் கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கின்றனர்:—

தோழர்கள் டி. எம். ஆதிகேசவலு நாயுடு திருவத்திபுரம்; டி. கே. நந்தகோபால முதலியார், வந்தவாசி; ஆர். முருகேச முதலியார்; சேத்துப்பட்டு, போளூர் தாலூகா; எம். பாலகிருஷ்ணநாயுடு, நாராயண குப்பம், செங்கம் தாலூகா; டி. கே. வரதராஜுலு ரெட்டியார், திமிரி, வாலாஜா தாலூகா; நாகன், அரக்கோணம்; ஜி. ராமச்சந்திர ரெட்டியார், கப்பளாம்பாடி, திருவண்ணுமலைதாலூகா; எம். ஆறுமுகம் பிள்ளை, வந்தவாசி; டி. குப்புராம முதலியார், உதயத்தூர், வேலூர் தாலூகா; வி. ராமலிங்க ராஜு, உடுகத்தூர், வேலூர் தாலூகா; டி. வெங்கிடாசல முதலியார், செங்கம்;

அறிக்கை விபரம்.

"வரப்போகும் இந்தியா சட்டசபைத்தேர்தலில் சேலம், கோவை, வடஆற்காடு ஜில்லா தொகுதிக்கு அபேட்சகராக நிற்க முன் வந்திருக்கும் டாக்டர் பி. வரதராஜுலு அவர்களை ஆதரித்து, சமீபத்தில் வட ஆற்காடு ஜில்லா போர்டு அங்கத்தினர்களில் 10 பேர்கள் வரை கையொப்பமிட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கையை கவனித்தோம். டாக்டர் வரதராஜலு சிறந்த தேசபக்தர். அவர்இதுவரை செய்து வந்திருக்கும் தேச சேவையும் பொதுஜன சேவையும், தேச விடுதலைக்காக அவர் மும்முறை சிறை புகுந்திருப்பதும் அனைவரும் அறிந்ததே. அவரைப் போன்ற அஞ்சா நெஞ்சம் படைத்த உத்தம தேச பக்தர்கள் இந்தியா சட்டசபையில் ஸ்தானம் வகிப்பதால் நாட்டிற்கு விசேஷ நன்மையுண்டாகக்கூடும் என்பதில் ஐயமில்லை. டாக்டர் வரதராஜலுவை நாங்கள் முழுமனதுடன், வட ஆற்காடு ஜில்லா வாக்காளர் அனைவரும்ஏகோபித்து வரப்போகும் இந்தியா சட்டசபைத்தேர்தலில் அவரை ஆதரித்து தங்களுடைய வாக்குகளைக் கொடுத்தனுப்ப வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

"நாடு சுதந்திரமடையவும், நாட்டில் ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் ஏற்படவும், தொழிலாளர் அபிவிருத்தியடைந்து க்ஷேமமாய் வாழவும், அவர் இதுவரை செய்து வந்திருக்கும் சேவையை ஒருநாளும் மறக்க முடியாது. இனியும் அவர் இது போலவே சேவை செய்து வருவாரென்பது உறுதி இந்நிலைமையில், வட ஆற்காடு ஜில்லா வாசிகள் அவருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து, அவர் தேர்தல் மகத்தான வெற்றியடையும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். அவருடைய தியாகத்துக்கும், தேச பக்திக்கும் ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும், நாம் வட ஆற்காடு ஜில்லா வாசிகள் போதிய பக்கமாக இருக்க வேண்டும்."

## மாகாண சட்ட சபை

### தோழர். ஜார்ஜ் ஜோசப்.

ராவ்பகதூர் ஏ. டி பன்னீர் செல்வம்அவர்கள் சென்னை சர்க்கார் உள்நாட்டு மந்திரி பதவி ஏற்றுக்கொண்டதன் பேரில் மதுரை, திருச்சி, தஞ்சை, இந்திய கிறிஸ்தவர் தொகுதியில் ஸ்தானம் காலியானதால் உபதேர்தல் நடக்கப்போகிறது. அத்தேர்தலில் அபேட்சகராக நிற்கப்போவதாக மதுரை பாரிஸ்டர் தோழர் ஜார்ஜ் ஜோசப் அறிவிக்கின்றார்.

# அரசியல் வாதிகள் நடுக்கம்.

## மிஸ். மேயோ புலி.

மிஸ் மேயோ அம்மையார் இந்தியாவிற்கு வரப்போகின்றார் என்கின்ற சேதி எட்டியவுடன் இந்திய அரசியல் வாதி, தேசியவாதி, சீர்திருத்த வாதி என்கின்ற கூட்டங்களுக்கு புலியைக்கண்ட ஆட்டுக்கூட்டங்கள் போல் நடுக்கங்கள் ஏற்பட்டு விட்டதைப் பத்திரிக்கைகளில் காணலாம்.

மிஸ்மேயோ யார்? அவர் புலிக்குச்சமானமானவரா? அந்தம்மையாரைக்கண்டால் இந்தியர்கள் நடுங்கவேண்டியதுதானா என்பவைகளை முதலில் யோசிப்போம்.

மிஸ் மேயோ ஒரு ஆங்கில மாது. அவர் 4, 5 வருடங்களுக்குமுன் இந்தியாவுக்கு வந்து இந்துக்களின் நாகரீகம், பழக்க வழக்கம், மதசம்பிரதாயம், வாழ்க்கை முறை முதலியவைகளைப் பற்றி நன்றாய் அனுபவ ஆதாரங்களுடனும், தக்கசாக்ஷியங்களுடனும் ஆராய்ந்து விசாரித்து அறிந்த உண்மைகளை ஒரு சிறிய புத்தக ரூபமாக்கி இந்தியத்தாய் என்னும் பேரால் உலக மக்களுக்கு வெளியிட்டவர்.

அந்தம்மையார் வெளியிட்ட உண்மைகளை இதுவரை எவரும்-அடியோடு பொய் என்று-இதுவரை யாரும் மறுத்துக்கூற முன்வரவில்லை. அரசியல் பிழைப்பு வாதிகளும் அரசியல் பிழைப்புப் பத்திரிகைகளும் அம்மையைதூற்றின, சிலகண்டன உரைகள்பகர்ந்தன, ஆனால் அவை பொய் என்று கூற யெவருக்கும் தைரியம் வரவில்லை.

தோழர் காந்தியார் அப்புத்தகம் இந்திய சீர்திருத்தவாதிகளுக்குள் என்றும் நிலைத்திருக்கவேண்டியதொரு ஆதாரம் என்றார்.

தோழர் ரவீந்தரநாத் டாக்கூர் "மத சம்மந்தமான காரியங்களுக்கு இந்தியர் மாட்டுச்சாணி சிறிது சாப்பிடுகின்றார்களேஒழிய வேறில்லை" என்றார்.

தோழர் லாலாஜபதிராய் அவர்கள் "அமரிக்கா மாத்திரம் வாழுகின்றதா"என்றுசொன்னார்.

தென்னாட்டு தேசபக்தர்களுக்குத் தலைவராய் வாய்த்த தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் "வேதம், சாஸ்திரம் ஆகியவைகள் தான் எல்லோரும் படிக்கக் கூடாது என்கின்ற நிர்பந்தம் இருந்து வருகின்றதே ஒழிய மற்றப்படி ஒன்றுமே படிக்கக் கூடாது" என்கின்ற நிர்பந்தம் இல்லை என்று சொன்னார்.

மகாகாருண்ணியமும், நீதியும், நாகரீக ஞானமும், பகுத்தறிவும் கொண்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பிரிட்டிஷ்அரசாங்கமோ குழந்தைகளைக் கல்யாணம் செய்யக்கூடாது என்ற சட்டம் செய்ய ஏற்பாடு செய்தாகி விட்டது" என்று உலகத்துக்குத் தெரிவித்து விட்டார்களே ஒழிய அதை சரியானபடி நீதி செலுத்தாமலே இருந்து வருகிறார்கள்.

மேயோ அம்மையார் இந்தியாவுக்கு வந்து இந்திய மக்கள் அவிவேகத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையும், மிருகத்தனத்தையும் வெட்டவெளிச்சமாய் ஆதாரங்களோடு விளக்கிக்காட்டிவிட்டுப்போய் இன்றைக்கு 4, 5 வருஷங்களாகியும் அவைவெளியான புத்தகங்கள் பல பாஷைகளிலும் பதினாயிரக்கணக்காகச் செலவாகியும் நாளதுவரை அவ்வாபாசமானதும், காட்டுமிராண்டித்தனமானதுமான விஷயங்களில் 100க்கு 10 வீதம்கூட அரசியல் வாதிகளாலோ, தேசிய வாதிகளாலோ, சீர்திருத்தவாதிகளாலோ, அரசாங்கத்தாராலோ ஒழிக்க முடியவில்லை என்றால் இந்தப் பாழாய்ப்போன இந்திய நாட்டுக்கு ஒரு மேயோ—அதுவும் 5 வருஷத்திற்கு ஒரு தடவை வரும்படியான மேயோ போதுமா? என்று கேட்கின்றோம்.

குழந்தை மணம் இன்றும் 4 வயது பெண் குழந்தைக்கு 25 வயது தடி ஆணை மணம் செய்கின்றார்கள். உள் நாட்டில் அந்த சட்டத்தை மீறினால் கேழ்வியே இல்லை. வெளிநாட்டுக்குப் போய் அங்கே மணம்செய்து கொண்டு வந்துவிட்டால் பேச்சே இல்லை என்கிற முறையில் இன்று நம் நாட்டில் குழந்தை மணம் தடுப்பு இருந்து வருகின்றது. இதைக் கண்டு நம் தேசபக்தர்கள் வெட்கமடையவேண்டியிருக்க மேலும் மிஸ். மேயோவைக்கண்டு எங்கள் யோக்கியதையைப்பற்றி நீ காகிதத்தில் எழுதினது போராதம்மா தயவு செய்து கல்லில் எழுதிவையம்மா என்று கேழ்க்க வேண்டாமா என்று கேழ்க்கின்றோம்.

கல்வி விஷயத்தைப்பற்றி இந்தியாவில் வெள்ளைக்கார நாகரீக அரசாங்கம் வந்து 200 வருஷமாகிய இன்றும் 100-க்கு 8 பெயரே. அதுவும் மேல் ஜாதிக்காரர்களுக்குள்ளாகவே கல்வி பெரிதும் நின்றுவிடும்மாதிரியான முறையில் இருக்குமானால் மிஸ். மேயோவை மேளதாளம் வைத்து அழைத்து ஊர்வலம் செய்து வரவேற்பு வாசித்து நமது அரசாங்க ஆக்ஷியின் யோக்கியதையே உலகெல்லாம் பரப்பும்படி காணிக்கை வைத்துக் கேட்டுக்கொள்ள வேண்டாமா என்று கேழ்க்கின்றோம்.

மனிதத்தன்மை விஷயத்தில்—ஆலயங்களுக்கு மக்கள் செல்லும் விஷயத்தில் இன்ன ஜாதியார் இவ்வளவு தூரம் தான் போகலாம் இன்ன ஜாதியார் போகவே கூடாது என்கின்ற காட்டுமிறாண்டி வழக்கத்தை நிறுத்த சட்டம் செய்யவேண்டும் என்று சொன்னால் சர்க்காரார் அது வெகுஜனங்களுக்கு இஷ்டமில்லை ஆனதால் அதை எதிர்க்கிறோம் என்று சொல்லுவதும் காங்கிரசுகாரர்கள் வெகு ஜனங்களுக்கு விரோதமான காரியத்தைச்செய்யக்கூடாது என்று சொல்வதும், வைதீகர்கள் மதத்தில் அரசாங்கமோ, பொதுஜனங்களோ, காங்கிரசோ, சீர்திருத்த வாதிகளோ பிரவேசிக்கக்கூடாது என்று சொல்லுவதும் கடைசியாக அச்சட்டம் வாபீசு வாங்கிக் கொள்ள நேர்ந்ததும், அதுவும் "காந்தியாரும் ராஜகோபாலாச்சாரியாரும் செய்த துரோகத்தினால் இச் சட்டம் வாபீசு வாங்கிக்கொள்ள நேர்ந்தது" என்று சொல்ல நேர்ந்தது என்றால் மிஸ். மேயோ அம்மையாரின் விஜயம் இந் நாட்டுக்கு ஒரு தடவை அவசியமா, பலபல ஆயிரம் தடவை அவசியமா என்று கேழ்க்கின்றோம்.

ஜீவகாருண்ய விஷயத்தில் ஆடு மாடுகளை உயிருடன் கட்டிப் போட்டு அதன் வாயையும், மூக்கையும் பிடித்து அமிழ்த்திக் கொண்டு விதரை நசுக்கி சரீரத்தில் சதை சதையாய் அறுத்து மாமிசத்தை எடுப்பதும் அந்த விதமான கைங்கரியத்துக்கு மத கைங்கரியம் என்று சொல்லுவதுடன் தான் சித்திரவதைக் கொலையைப்பற்றி வேறுயாருக்கும் பேச உரிமையல்லை என்று சொல்லுவதுமான காரியங்கள் நேற்றும், இன்றும், நாளையும், முக்காலத்திலும் நடந்துவரக்கூடியதாய் இருக்கும்போது மிஸ். மேயோவை இந்தியாவுக்கு வரும்படி இதுவரை அழைக்காமல் இருந்தது இந்நாட்டு மக்கள் அவிவிவேகமல்லவா என்று கேழ்க்கின்றோம்.

மனித சமூகத்தில் பிராம்மணன்என்று ஒரு ஜாதி மேலாக இருந்துபாடுபடாமல்வயிறுவளர்க்கவும், சண்டாளன் என்று ஒரு ஜாதி கீழாக இருந்து பாடுபட்டு பாடுபட்டு இராப்பட்டினியாய் இருக்கவுமான காரியங்கள் கூடாது என்றால் சங்கராச்சாரி என்னும் மதத்தலைவன் அது பிறவியிலேயே ஏற்பட்டதென்றும் அதற்கு ஆதாரம் பிராமணனுடைய ரத்தத்திலும் சண்டாளனுடையரத்தத்திலும் இருக்கின்றது என்றும் சொல்வாரானால் மிஸ். மேயோ நூற்றுக்கணக்காய் ஆயிரக்கணக்காய் இந்த நாட்டில் பிறக்காததும் பிறந்த பெருமையை அடைய முடியாமல் போனதும் இந்தியாவுக்கு பெருத்த நஷ்டமல்லவா என்று கேழ்க்கின்றோம்.

இப்படிப்பட்ட குறைகள் கொடுமைகள், அவிவிவேகத்தனங்கள், மூர்க்கத்தனங்கள், காட்டுமிறாண்டித்தனங்கள் இன்னமும் வண்டி வண்டியாய் இருக்க அவைகளைப்பற்றி சரியாய் பேசாமல் அவைகளை ஒழிக்க யோக்கியமாய் முயற்சிக்காமல் "மிஸ்மேயோ வருகிறாள்" மீண்டும் மிஸ்மேயோ" "குப்பைக்காரி மேயோ வருகை" என்றெல்லாம் தலைப்புக் கொடுத்து மேயோவை வைவதென்றால் இக்கூட்டத்தாருக்கு மனிதத்தன்மையோ, சுயமரியாதை உணர்ச்சியோ இருக்கின்றதா என்று கேழ்க்கின்றோம்.

மிஸ். மேயோ அம்மையாரின் இந்திய விஜயத்துக்கு அரசாங்கத்தார் உதவி புரிந்ததாகவும் உள்ளவாய் இருந்ததாகவும் இனியும் அப்படிச் செய்வார்களா என்றும் இந்திய சட்டசபையில் கேள்விகள் கேழ்க்கப்பட்டதாகப் பார்த்தோம். இதற்கு அரசாங்கம்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

## "கர்மபலன்."

தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் அவர்களுக்கு விபரம் தெரிந்த காலம் முதல் இன்று வரை இன்னமும் தேசியப் பல்லவி பாடிக்கொண்டிருந்தது யாவருக்கும் தெரிந்ததாகும். அதோடுகூடவே இந்த சர்க்காரை, அன்னிய ஆக்ஷியை ஒழித்து சுயராஜ்ஜியம் ஏற்படுத்தவேண்டும் என்ற அனுபல்லவியையும்பாடிவந்ததும் வருவதும் யாவருக்கும் தெரியும்.

தேசியம் என்பது வயிற்றுப் பிழைப்பு நாடகம் என்றும், அன்னிய ஆக்ஷி, சுய ஆக்ஷி, சுயராஜ்ஜியம் என்பவைகள் எல்லாம் பார்ப்பனர்களுக்கும், பணக்காரர்களுக்கும்பாடுபடும் சோம்பேரி நாடகம் என்று நாம் சொல்லிவருகின்றோம். இதை Dr. நாயுடு அவர்கள் எதிர்த்துப் பழித்து தூஷித்தும் வந்திருக்கிறார் என்றாலும் இந்தப் பிரசாரத்தின் பலனை இவர் என்றைக்காவது ஒரு நாளைக்கு அனுபவிப்பார் என்றே கருதி அதே லக்ஷியம் செய்யாமல் இருந்து வந்தோம் எனினும் "கர்மத்தின்பலனை" இன்று அவர் அடைய நேர்ந்ததை அவரே மறுக்க மாட்டார் என்று கருதுகிறோம். அதாவது இந்த நாட்டுக்கு, இந்திய தேசியத்துக்கு, சுயராஜ்ஜியத்துக்கு, அன்னிய ஆக்ஷியை ஒழிப்பதற்கு தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தகுதியுடையவர் என்றும் Dr. நாயுடு தேசத்துரோகியாகவும், சுயராஜ்ஜியவிரோதியாகவும் ஆகிவிட்டார் என்றும் பார்ப்பனர்கள் இப்போது சொல்லுகிறார்கள். இது நாயுடு செய்துவந்த காரியத்துக்கு தக்க பயன் என்றே சொல்லுவோம்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் யார் என்பதை நாம் யாவருக்கும் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. அவரது ஒழுக்கம், சமுதாய விஷயத்தில் உள்ள கொள்கை, பொருளாதாரத்தில் உள்ள நாணயம், அனுபவம் முதலியவைகளும் அரசியலில் பொதுஜனப் பிரதிநிதித்துவமுறையில் முன்பின் அவர் நடந்துகொண்ட மாதிரியும் அறிந்த இந்த நாட்டு மக்களுக்கு நாம் அதிகம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. காங்கிரசுக்கும், தோழர்ராஜகோபாலாச்சாரியாருக்கும் இவைகள் தெரியாது என்று எந்த மூடனும் சொல்லமுடியாது. இந்த உண்மைகளையெல்லாம் அறிந்தேதான் தோழர் ராஜகோபாலாச் சாரியார் அவர்கள் தனது தேர்தல் பிரசாரத்தில் எங்கு பேசினாலும் "காங்கிரசு சார்பாய் நிற்கின்றவர்கள் யோக்கியர்களா அயோக்கியர்களா என்று பார்க்காதீர்கள், எவ்வளவு அயோக்கியர்களானாலும் காங்கிரசில் அங்கத்தினரானால் யோக்கியர்களாகி விடுவார்கள் ஆதலால் காங்கிரசின் பேரால் எவ்வளவு அயோக்கியர்கள், நாணைய மற்றவர்கள், ஒழுக்கங்கெட்டவர்கள் நின்றாலும் அவர்களுக்கே ஓட்டுக்கொடுங்கள் என்று சொல்லி வருகிறார் என்றேகருதுகின்றோம். இதிலிருந்து காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட சரக்குகளை ஒருவாறு மதிப்பிடலாம்:-

நிற்க இந்த நாட்டில் காங்கிரஸ் ஏற்பட்டு காங்கிரசு கணக்குப்படியே 50 வருஷங்கள் ஆகின்றன. அநேகப் பேர்கள் காங்கிரசில் பல வருஷங்களாய் இருந்து வந்திருக்கின்றார்கள், இன்றும் இருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் எல்லோரும் யோக்கியர்களும், நாணயஸ்தர்களும்தானா என்று கேள்க்கின்றோம். அன்றியும் பல காலம் அதாவது 10 ௵ 20 ௵ காங்கிரசில் இருந்து விட்டு ஏதோ ஒரு காரணத்தால் இன்று மாத்திரம், இவ் வருஷமாத்திரம் காங்கிரசில் இல்லாதிருந்தால் அவர்கள் யோக்கியர்களாகி இருக்கமாட்டார்களா என்று கேள்க்கின்றோம். மேலும் நேற்றுவரை அயோக்கியர்களாக இருந்துவிட்டு இன்று நாலணா கொடுத்து காங்கிரசில் கையெழுத்து போட்டவுடன் யோக்கியர்களாகி விடுவார்களா என்று கேள்க்கின்றோம்.

அன்றியும் தேர்தல் ஆன பிறகோ, அல்லது மறுநாளோ நான் காங்கிரஸ் வாதி அல்லவென்று சொல்லிவிட்டால் உடனே அவர்கள் பழைய அயோக்கியர்களாகி விடுவார்களா என்று கேள்க்கின்றோம்.

கேவலம் எப்படியாவது தேர்தலில் பார்ப்பன ஆதிக்கம் ஏற்பட்டால் போதுமென்ற கருத்தினால் கிடைத்த ஆட்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு பொதுஜனங்களுக்கு சமாதானம் சொல்லுவதற்காக இப்படியெல்லாம் பேசினால் இது புத்திசாலித்தனத்தைக் காட்டுமா அவிவேகத்தைக் காட்டுமா? என்பதோடு இம் மாதிரி நடவடிக்கைகள் வெற்றியளிக்குமா என்றும் வினவுகின்றோம்.

கடைசியாக தோழர் சி. ராஜகோபாலாச்சாரியருக்கு இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான நிலை ஏற்பட்டதே என்பதற்காக நாம் பரிதாபப் படுவதோடு "கர்ம பலன்" அவரையும் விடவில்லை என்றே கருதுகின்றோம்.

## மண்குதிரையை நம்பின பலன்.

### கருப்புக்கொடியும், தடி அடியும்வெடி குண்டும்

1

தோழர் காந்தியாருக்கும், காங்கிரசுக்கும் அரசியல் வாய்ப்பூட்டு ஏற்பட்டு விட்டதின் பிறகு ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்காவிட்டால் தங்களுக்கு உலகம் மறைந்து விடுமே என்று பயந்து சமூதாயத் துறையில் வேலைசெய்ய எண்ணங்கொண்டு ஹரிஜன சேவை, ஆலயப்பிரவேசம் என்னும் பெயர்களால் சுற்றுப்பிரயாணம், செய்ததும், பணம் தண்டினதும் யாவரும் அறிந்ததாகும். இதை மெய்யென்று நம்பின சில அரசியல் பிழைப்புக்காரர்கள் ஆலயப்பிரவேச மசோதா, தீண்டாமை விலக்கு மசோதா முதலியவைகள் கொண்டு வந்து விளம்பரம் செய்து கொண்டதும் இந்தியர்கள் அறிவார்கள்.

பிறகு என்ன ஏற்பட்டது? மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினபலன்தான் ஏற்பட்டது. ஏன் ஏற்பட்டது. என்றால்தோழர் காந்தியார் தமது பரிவாரங்களுடன் சுற்றுப்பிரயாணம் செல்லுகையில் அவருக்கு ஏற்பட்ட கருப்புக்கொடி, தடியடி, வெடிகுண்டு ஆகியவைகள் பிரயோகமும், காந்தி கூட்டத்தார் மற்றவர்கள் மீது பிரயோகித்த தடியடி பிரசாரமும் சேர்ந்து காந்தியாரைப்பயப்படுத்தி விட்டது.

இதன்பயனாக தோழர்ராஜகோபாலாச்சாரியார் மூலம் ஓர் அறிக்கை வெளியிட வேண்டியதாய் விட்டது. அந்த அறிக்கையானது காங்கிரசும், காந்தியாரும் சமூகத்துறையில் கொண்டுள்ள உள் எண்ணத்தை நிர்வாணப்படுத்திக்காட்டி விட்டது என்றுதான் சொல்லுவோம். "சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்கின்ற பழமொழிபோல் ஆலயப் பிரவேசம் எங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்றும் அரசியல் உரிமைகளும், பொருளாதார முன்னேற்றமும் கிடைத்தால் போதும் என்றும் கருதிஅதற்காக அரசாங்கத்தினிடம் கெஞ்சிக் கூத்தாடிக்கொண்டிருந்த தீண்டப்படாதார் என்னும் மக்களை சாதிப்பதாக வேஷம் போட்டு "அங்கேண்டி மகளே ஆலாப்பரக்கின்றாய்இங்கு வாகாற்றாய்ப்பறக்கலாம்." என்ற மாதிரியில் அழைத்து அவர்களை [தீண்டாதார்கள்] ஏமாற்றி யாகிவிட்டது. "ஹரிஜன வேலை செய்யாமல் ஹரிஜனங்களுக்காக பாடுபடாமல் உயிர்வைத்து இருக்கமுடியாது. அதற்காக பட்டினி கிடந்து சாகப்போகிறேன். என்று சொல்லி விடுகலை பெற்று வந்ததின் பயன் இன்று விளங்கி விட்டது.

இந்திய தேசியசபையின் சர்வாதிகாரியும், ஏகப் பிரதிநிதியும் என்று சொல்லப்பட்ட தோழர் காந்தியாரின் முயற்சியும், ஹரிஜன சேவையும் தீண்டப்படாதவர்களுக்கு இந்தப்பயனைக் கொடுத்திருக்குமானால் இனிஅவர்களுக்கு தேசாபிமானத்தால் இந்திய மக்களை நம்புவதால் என்ன பயன் கிடைக்கக்கூடும் என்பதைப்பற்றி நாம் ஜோசியம் கூறவேண்டியதில்லை.

இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் தீண்டப்படாதாருக்கு சமசுதந்திரம்கொடுக்க இஷ்டப்படவில்லைஎன்றுமுடிவு ஏற்பட்டுவிட்டால் அதுவும்பலஆயிரக்கணக்கானவருஷங்களாய் மனிதஉரிமை சுதந்திரம் கூட கொடுக்க இஷ்டமில்லை என்று ஏற்பட்டு விட்டால் அவர்கள் இனியும் இந்த தேசமக்களையும், சுதந்திரம் கொடுக்க சம்மதியாத மதத்தையும், சாஸ்திரத்தையும் நம்பிக்கொண்டு அவர்களுடன்கூட இருக்கவேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஆலயப்பிரவேசபேச்சும், வார்த்தையும் எல்லாம் தீண்டப்படாத மக்கள்என்பவர்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டஅரசியலில் தனித்தொகுதி தேர்தல்உரிமையையும்,உத்தியோகத்தில்தனி பிரதிநிதித்துவத்தையும் பாழாக்குவதற்காக ஏற்பட்ட சூக்ஷி தவிர வேறில்லை என்பது இப்போதாவது தீண்டப்படாத மக்களுக்கும், கீழ் ஜாதியராய் கருதப்படும் மக்களுக்கும் நன்றாய் விளங்கிற்றா இல்லையா என்று கேள்க்கின்றோம்.

இன்று தேர்தலுக்காக என்று வெளியிட்டிருக்கும் "காங்கிரஸ் கொள்கை திட்டங்களிலும் நன்றாய் வெளிச்சமாய் மதக்கொள்கைகளில் நடு நிலைமை வகிப்பதாகவும், மதசமபந்தமான பழக்க வழக்கங்களில் பிரவேசிப்பதில்லை என்றும், அவற்றைக் காப்பாற்று

## நமது மாகாணத்தில் பெண் வக்கீல்கள்.

நமது நாட்டில் பெண்கள் சமயலுக்கும், படுக்கைக்கும் மாத்திரம் பயன்படக்கூடியவர்கள் என்கின்ற எண்ணம் வைதீகர்களுக்குள்ளும், வயோதிகர்களுக்குள்ளும் இருந்து வருவதோடு பல பெண்களும் அப்படியே நினைத்துக்கொண்டுமிருக்கிறார்கள்.

சில பெண்கள் இந்த இரண்டு வேலைகளுக்கும் இடையூறு இல்லாமல் ஏதாவது வேலை கிடைத்தால் மாத்திரம் செய்யலாமே தவிர மற்றபடி பெண்கள் ஆண்களைப் போல் வேலை பார்ப்பது பாவமென்றும் கருதி இருக்கிறார்கள். சில பெண்கள் சட்டசபையில் இருந்தவர்களும், இருக்க பாக்கியம் பெற்றவர்களும் கூட பெண்களுக்கு கும்மி, கோலாட்டம், கோலம், தையலில் பூப் போடுதல் ஆகிய வேலைகள் சம்மந்தமான கல்வி கற்றால் போதும் என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

நாம்முடைய தேசத்து தேசியத்தலைவர்களும், மகாத்மாக்கள் என்போர்களுக்கும் பெண்கள் சந்திரமதி போலும், சீதை போலும், நளாயினி போலும் இருக்க வேண்டும் என்று சொல்லி அதற்குத் தகுந்த பிரசாரமும் செய்து வருகின்றார்கள் இப்படிப்பட்ட கஷ்டமான நிலையில் நம் தென் இந்தியாவில் சென்னையில் பெண்கள் பி. ஏ., பி. எல்., படித்து வக்கீல்களாகி, அட்வகேட்டுகளும் ஆகி இருக்கின்றார்கள் என்றால் பெண்களை எல்லாத் துறையிலும் ஆண்களைப் போலவே பார்க்கவேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி இருக்கும் என்பதை நாம் எழுதிக் காட்டவேண்டியதில்லை. அப்பெண் வக்கீல்களில் இருவர்கள் தோழர் எம். ஏ. கிருஷ்ணம்மாள் எம். ஏ. ஏதுகிரியம்மாள் ஆகியவர்களாவார்கள் இவர்களது மூத்தசகோதரியாரும் கொஞ்சகாலத்துக்குமுன் தான் பரிக்ஷையில் தேரி அட்வகேட்டாகி இருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜி தோழர் தேவதாஸ் அவர்கள் குமார்த்தியும் வக்கீல் பரிக்ஷையில் தேறி அட்வகேட்டாகி கோயமுத்தூரில் தொழில் நடத்தி வருகிறார்கள்.

தங்களைப் பெண்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு வெட்கமில்லாமல் கும்மியும், கோலாட்டமும், கோலமும், தையலும் தான் பெண்கள் கற்க வேண்டுமென்று சொல்லுகின்றார்களே அப்படிப்பட்ட பெண்களுக்கு இனியாவது புத்திவருமா? என்று நினைக்கின்றோம்.

## வைசிராய் பேச்சு

### சட்டமறுப்பு இயக்கம் செத்தது.

சட்ட மறுப்பு

காலகிரமத்தில் சட்ட மறுப்பு இயக்கத் தலைவர்கள் பயனற்ற தடைவேலை, நாசவேலை ஆகியவைகளைக் கைவிட்டு விடுவார்கள் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். நான் முன் ஒரு தடவை அதைப் பற்றிப் பேசியபோது சட்ட மறுப்பு உயிருக்குஊஞ்சலாடிக்கொண்டிருந்தது. மகா ஜனங்கள் அதை வேண்டவில்லை யென்பது தெளிவுபட ஆரம்பித்துவிட்டது. சென்ற 12 மாத காலத்திய சம்பவங்களிலிருந்து, அவ்வுணர்ச்சி இன்னும் வலுத்து, கடைசியாக சென்ற ஏப்ரல் மாதம் அப்புரட்சி இயக்கத்தின் மூல புருஷரே சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கும்படி எல்லா காங்கிரஸ்காரர்களுக்கும் யோசனை சொல்லப் புறப்பட்டார். ஸ்வராஜ்யத்திற்காக சட் மறுப்புச் செய்வதை நிறுத்தும்படி அவர் சொன்னார். இப்பால் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி, அதை ஊர்ஜிதம் செய்ததுடன், சட்டசபைப் பிரவேசம் செய்யவேண்டுமென்றும் முடிவு செய்தது. ஒரு காலத்தில் அது பயனற்ற முறையென்று பல காங்கிரஸ் தலைவர்கள் கூறி வந்தது ஞாபகமிருக்கும். இவ் விஷயங்களைப்பற்றி சமீப காலத்தில் விவாதங்கள் நடந்து முடிவு செய்யப்பட்டபோதுதான் இந்தியாவில்இல்லை. ஆனால் 1934 ஜூன் 6ந் தேதி இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய முறை இன்னதென்று வெளியிட்ட அறிக்கை எனது பூரணமான சம்மதத்தைப் பெற்றிருந்தது. அரைமனதாகவும், பெருந் தன்மையில்லாமலும் அவ் வறிக்கை வெளியிடப்பட்டதாக சிலர் கண்டித்திருக்கிறார்கள் ஆனால் 1932ல் நான் சொல்லியது போல் சட்ட மறுப்பை ஒருவிதமாக முடிவுக்குக் கொண்டுவர நம்மாலானதைச்செய்யாவிடில் நமது கடமையில் தவறியவர்களாவோம். அவ் வியக்கம் திரும்பவும் தலையெடுக்க விடக்கூடாது. இப்போது காங்கிரஸ் ஸ்தாபனங்கள் மீதுள்ள தடையை நீக்கி விட்டோம்.

சட்ட மறுப்பு இயக்கம் முடிவாக நின்றுவிட்டதாகவே நான் நம்புகிறேன். 1932-ல் நான் கையாளப் போவதாக வெளியிட்ட முறை பயனளித்து விட்டது. கவர்ன்மெண்டு மாத்திரம் இந்த சந்தோஷமான முடிவுக்குக் காரணமல்ல; நீங்கள் யாருடைய அபிப்பிராயங்களை இங்கு வந்து தெரிவிக்கிறீர்களோ! அம் மகாஜனங்களின் நல்ல புத்தியும், உறுதியுமே அதற்கு வெகுதூரம் காரணமாகும். புரட்சித் தனமாகவும், அர்த்த மில்லாத பயனற்ற வழியிலும் அதிகாரிகளுடன் போராடுவதால் அபிவிருத்தியுண்டாக்கி விடாதென்று ஜனங்கள் உணர்ந்து விட்டார்கள். பலவந்தம், அல்லது பெருவாரியான மகாஜன இபக்கம் சரியான முறையல்லவென்ற உண்மை நாடெங்கும் ஜனங்களுக்குப் புலப்பட்டுவிட்டது. இது பற்றியே நான் சட்ட மறுப்பு இயக்கம் இனிக் பிழைக்காது, தலையெடுக்க முடியாது, என்றுநம்புகிறேன். நாம் கவனிக்க வேண்டியிருக்கிற சமூக ராஜீயப் பொருளாதாரப் பிரச்சினைகள் பல விருப்பதால், எல்லா வகையான ராஜீய வாதிகளும் நேசபாவத்துடன் ஒத்துழைத்தால் தான் அக் கஷ்டமான பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்.

வதாக வாககுறுதி கொடுப்பதாகவும் கண்டிருப்பதை யாரும் காணலாம். இந்த நிலையில் மதத்தால், சாஸ்திரங்களால், பழக்க வழக்கங்களால் கீழ்ப்பட்டு இழிவு படுத்தப்பட்டுதீண்டாதாராய்ப் பட்டவரகூடாதாவராய், பாவிகளாய் கருதப்பட்டு அந்தப்படி நடத்தப்பட்டு வரும் மக்கள் இனியும் காங்கிரசையும், காந்தியாரையும் நம்புவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போல் ஆகாதா என்று கேள்ப்பதோடு எப்பாடுபட்டாவது, என்ன தியாகம் செய்தாவது தனித்தொகுதி முறையையே அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி அடைவதற்கு முயற்சிக்க வேண்டியது தாழ்த்தப்பட்ட மக்களின் கடமை என்று தெரிவித்து கொள்ளுகின்றோம்.

## கோவை தொழிலாளர் மகாநாடு.

கூடிய சீக்கிரத்தில் கோயமுத்தூரில் தொழிலாளர் மகாநாடு ஒன்று கோவை தொழிலாளர்களால் கூட்டப்படும். அதற்குத் தோழர் டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை வகிப்பார். அடுத்த மாதத்தில் கூட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றது.

## கல்யாணமாகாதவர்களுக்கு வேலை இல்லையாம்.

ஜெர்மனிசர்க்கார் உத்தரவு.

ஜெர்மனி அரசாங்கத்தார் சர்க்காரிலோ அல்லது சொந்த ஹோதாவிலுள்ளவர்களிடமோ வேலை பார்த்து வரும் 25-வயதுக்குக் கீழ்ப்பட்ட கல்யாணமாகாத ஆடவர்கள், பெண்கள்யாவரையும் நீக்கிவிட வேண்டுமென கடுமையான ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

வேலையிலிருந்து விலகும்அவர்களுடைய ஸ்தானத்தில் வயதானவர்களை, முக்கியமாக பெரிய குடும்பங்களுள்ளவர்களையே நியமிப்பார்கள்.

சகல முதலாளிகளும், தாங்கள் வேலையிலிருந்து நீக்கியவர்களின் தொகையை வேலையற்றோர். கஷ்ட நிவாரண அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்கள்.

அவ்விதம் வேலையிலிருந்து விலக்கப்படுவோருக்குதொழில் இலாகா, வீட்டு வேலை, விவசாயம் முதலிய துறைகளில் வேலை கொடுப்பார்கள்.

தொழிலாளர் விடுதிகளில் 1வருஷம் தொண்டு செய்தவர்களையோ அல்லது நாஜிக்கட்சி, நாஜிப்படை இவைகளின் பழைய அங்கத்தினர்களையோ, ராணுவத்திலோ, கடற்படையிலோ கலந்து கொண்டுவேலை செய்திருப்பவர்களையோ ஷை உத்திரவு கட்டுப் படுத்தாது. அதாவது அவ்வுத்திரவு சம்பந்தப்பட்ட வரையில் மேலே குறிப்பிட்டவர்களுக்கு விலக்களிப்பார்கள்.

இனி 25-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுவதாயின், தொழில் இலாகா அதிகாரிகளின் அனுமதிபெற்றே வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

## ருஷியா.

ருஷியாவை சர்வதேச சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வல்லரசுகள் யோசித்து வருகின்றன. பிரிட்டிஷ் பிரான்சு இத்தகைய சர்க்கார்கள் அபிப்பிராயங்களை கேட்டுவிட்டு இருக்கிறார்கள்.

# பகுத்தறிவு.

ஈரோடு 1934- செப்டம்பர் 2-வ


## வட நாட்டுத் "தலைவர்கள்",

### பூலாபாய் தேசாய் & சர்தார் சாதூல் சிங்.

தோழர் பூலாபாய் தேசாய் அவர்கள் சென்ற மாதம் சென்னை மாகாணத்திற்குத் தருவிக்கப்பட்டு பல இடங்களில் சொற்பொழிவாற்றும்படி செய்யப்பட்டதில் அவர் சொற்பொழிவிலிருந்து மிக மோசமான வாக்கியங்கள் காணப்பட்டதை வாசகர்கள் பல பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம்.

அவற்றில் கவனிக்கத்தக்க ஒரு வாக்கியம் என்னவென்றால் "சென்னை மாகாணத்தில் சர்க்காரை ஆதரிக்க சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று இருந்து வருகின்றது" என்பது.

அதேமாதிரி தமிழ் நாட்டுக்கு வந்த மற்றொரு தோழர் சர்தார் சாதூல்சிங் என்பவர் "காங்கிரஸ் குதிரை போன்றது, மற்ற ஜஸ்டிஸ் கக்ஷி முதலியவைகள் கழுதை போன்றது" என்றும் பேசிவிட்டு போயிருக்கிறார். இவர்களைப்பற்றி நாம் பரிதாபப்படுகின்றோம். ஏனெனில் இவர்கள் தமிழ் நாட்டைப் பற்றியோ, ஜஸ்டிஸ்க் கக்ஷியைப் பற்றியோ, சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியோ, ஒன்றும் அறியாதவர்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனர்கள் சர்க்கிஸ் மாஸ்டர்கள் மாதிரி வடநாட்டு ஆசாமிகளை சர்க்கிஸ் வளையத்துக்குள் ஆட்டிவிக்கும் மிருகங்களைப் போலப் பிடித்துக்கொண்டு வந்து ஆட்டுவிப்பதின் பயனாய் இம்மாதிரி அவர்கள் சரியாய் ஜீரணமாகாத ஆகாரங்கள் வாந்தி எடுக்கப்படுவதுபோல் கக்கிவிட்டுப் போக நேரிட்டதே ஒழிய மற்றபடி வடநாட்டுத் "தலைவர்கள்" தங்கள்சுயபுத்தியுடனும் சுய அனுபவத்துடனும் சுய மரியாதையில் லக்ஷியம் வைத்தும் பேசின பேச்சுகள் என்று சொல்ல முடியாது.

இதுபோலவே முன் ஒரு தடவை தோழர் சர்தார் பட்டேல் என்று சொல்லப்படும் வல்லபாய் பட்டேலும், மற்றும் தோழர்கள் C. R. தாஸ், மாளவியா, லஜபதிராய் முதலியோர்களும் நமது நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட காலத்தில் ஞானமில்லாமல் உளறிக் கொட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை நாம் வாசகர்களுக்கு மறுபடியும்ஞாபகமூட்டவேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

தென்னாட்டுப்பார்ப்பனர்களுக்குத்தங்கள் சொந்த போர்வையுடனானாலும் சரி, காங்கிரஸ் போர்வை யுடனானாலும் சரி பொது ஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமல் முறியடிக்கப் பட்டும், தங்களது நயவஞ்சகத் தன்மைகளையும் சுயநலப்பித்தலாட்டங்களையும் பாமர மக்கள் அறிந்து அவர்கள் மீது வெறுப்புக்கொண்டிருக்கும் காலங்களிலும் மற்றும் வேறு இயக்கம் தோன்றி பார்ப்பனர்களின் சோம்பேறிவாழ்வுக்கு ஆபத்து வரும்படியான நிலை ஏற்படும் போதும் இப்படிப்பட்ட வட நாட்டுச் சோணகிரிகளைக் கூலிக்கு பிடித்துக்கொண்டு வந்து ஆட்டுவிப்பது அவர்களது பரம்பரை வழக்கமேயாகும்.

இவர்களில் சிலர் தென்னாட்டுக்கு வந்துபோன பின்பு பூர்வ ஞானம் ஏற்பட்டு தங்களது தப்பிதத்தைஉணர்ந்து வருந்தி மன்னிப்புக்கேட்டுக் கொண்டிருப்பதோடுதென்னாட்டுப் பார்ப்பனர்களையும் அளவுக்கு மீறிக்கண்டித்தும் இருக்கிறார்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனர்களைப்பற்றி வட நாட்டுத்தலைவர்கள் இங்கு வந்து போனபிறகு கொண்ட அபிப்பிராயங்களை நாம் முன் பல தடவை எடுத்துக்காட்டி இருக்கின்றோம். ஆனாலும் இப்போதும் ஒரு தடவை எடுத்துக்காட்டுவது குற்றமல்ல என்றே நினைத்து சில குறிப்பிடுகின்றோம்.

விவேகானந்தர் கூறியதின் சுருக்கம் "பார்பனர்கள் விஷப்பாம்பு போன்றவர்கள் அவர்கள் விஷத்தினால் பார்ப்பனரல்லாதார் அழிந்து போகுந்தருவாயிலிருக்கிறார்கள். இவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் பார்ப்பனர்கள் கக்கிய விஷத்தை தாங்களாகவே உருஞ்சிக்கொள்ள வேண்டும்" என்பதாக சொல்லி இருக்கிறார்.

தோழர் சர். பி.சி.ரேய் அவர்கள் "பார்ப்பனர்களை வங்காளாக்குடாக்கடலில் போடவேண்டும்" என்றும் சொன்னார்.

தோழர் C.R. தாஸ் அவர்கள் "எனக்குசுயராஜ்ஜியம்கிடைத்து விட்டால் முதலில் இந்தப் பார்ப்பனர்களையும்,பரிகாரிகளையும் ஒன்று படுத்தி விடுவேன்" என்றும் சொன்னதோடு தான் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும், தலைவரையும்பற்றி பேசின சில வார்த்தைகளுக்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

லாலா லஜிபத்திராய் அவர்கள் தென்னாட்டுக்கு வந்துபோன உடன் தனது தவறை உணர்ந்து "சமூகத்தில் உள்ள ஆபாசங்களுக்கெல்லாம் மதமே காரணம்" என்றும் கோவில்களுக்குள் மனிதத்தன்மை என்பதே கிடையாது" என்றும் தமிழ் நாட்டைப் பொருத்தவரை தைரியமும், மனஉறுதியும் கொண்ட எதற்கும் அஞ்சாத ஒரு சீர் திருத்தவாதி அவசரமாய் தேவை என்றும் சொல்லியிருக்கிறார்.

தென்னாட்டைப்பற்றி அ. ஆ கூட தெரியாத தோழர் காந்தியும் கூட பார்ப்பனரல்லாதாரைப்பற்றி கண்டபடி உளரிவிட்டு கடைசியாகத் தன்னை கன்னியாகுமரி கோவிலுக்குள் விட மறுத்த பிறகே "கோவில்கள் குச்சுக்காரிகள் குடிசை" என்று சொன்னதுடன் "பிராமணர்கள் செய்த அக்கிரமங்களுக்கு அதன் பயனை அனுபவிக்க வேண்டியது அவசியம் தான் என்று சொன்னார்.

பண்டித மாளவியாவும் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் கோவிலுக்குள் பார்ப்பனர்பார்ப்பனரல்லாதார்ஆகியவர்களுக்கு தனி தனி இடம் அதாவது கோவிலுக்குள் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவப்படி இடம் ஒதுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனிக்கோவிலே அதாவது கோவில் விஷயத்தில் தனித் தொகுதியே இருக்கவேண்டும் என்றும் இதனால் எல்லாம் தேசியம் கெட்டுப் போகாதென்றும்சொன்னதோடுஜாதி உயர்வு தாழ்வு இருந்தாக வேண்டும் என்றும்அதை அழிக்க இதற்கு முன் எத்தனையோபேர்எவ்வளவோ பாடுபட்டும்ஜாதிஇன்னமும் உயிருடனிருந்து வருகின்றதென்றும், அது யாராலும் அசைக்க முடியாதென்றும் சொல்லிவிட்டு கடைசியாக தென்னிந்தியாவில் ஜாதியை ஒழிப்பதற்கு மாத்திரமல்லாமல் கடவுளைக் கூட அழிக்க ஒரு இயக்கம் தோன்றி இருக்கின்றதென்றும் பரிகாசமாய் பேசிவிட்டுப் போனார்.

போகும்போது இங்கு அவருக்கு நடந்த மரியாதைகளைப் பார்த்த பின்னர் அங்கு போன பிறகு தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்களைப்பற்றி நீலிக்கண்ணீர் வடித்துப் பேசவும் அவர்களுக்குக் கோவில் பிரவேச உரிமை விஷயத்தில் வழ வழ என்று பேசவும் வேண்டியதவசியம் ஏற்பட்டு விட்டது.

அதுபோலவே தோழர்கள் பூலாபாய் தேசாயும், சர்தார் சிங்கும் சீக்கிரத்தில் தங்கள் தப்பிதத்தை அறிந்து திருத்திக்கொள்வார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் அவர்கள் இங்கு வந்த சமயம் உண்மைகளை எடுத்துக்காட்ட சந்தர்ப்பமில்லாமல் போனது விசனிக்கத்தக்கதேயாகும். என்றாலும் பொருப்பும் சுயமரியாதையும் உள்ள மக்களாய் இருந்தால் இந்தப்படி தங்களுக்கு பரீக்ஷை இல்லாத ஒரு இடத்திற்கு வந்து பார்ப்பனர்கள் கையாளாகவும், ஆயுதங்களாகவும் இருந்து கிளிப்பிள்ளைகள் போல் சொல்லிக்கொடுத்ததைக்கக்கிவிட்டும்போயிருக்க மாட்டார்கள். இதிலிருந்தே காங்கிரசில் இருக்கும் தலைவர்கள் என்று சொல்லக்கூடியவர்களுடைய யோக்கியதையும், நாணயப் பொருப்பும் சுயமரியாதையும் எவ்வளவு-எப்படிப்பட்டது என்பதை உணரலாம்.

உண்மையிலேயே சுயமரியாதை இயக்கம் சர்க்கார் ஆதரவு பெற்ற இயக்கமா என்பதை அறிவும் நாணயமும் நடு நிலைமையும் உள்ள ஒவ்வொருவரையும் சிந்தித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்

ஏதாவது ஒரு இயக்கமோ, ஒரு கொள்கையோ பார்ப்பனர்களுக்கு விரோதமாகவோ அவர்களுடைய சோம்பேறிப்

பிழைப்புக்குக் கெடுதியாகவே இருந்தால் அதை யோக்கியமான முறையில் சமாளிக்க அவர்களுக்கு யோக்கிய சக்தி இல்லாமலிருந்தால் அவைகளை ஒழிக்க அவர்களுக்கு ஒரே ஆயுதம் தான் உண்டு. அதாவது "தேசத்துரோகம், தேசியத்துக்கு விரோதம், மதத்துரோகம் சர்க்காருக்கு, அடிமைஎன்பன போன்ற பெயர்களைச் சொல்லி அழிக்கப்பார்ப்பதுதான்.

இன்றைய சர்க்காரில் இந்தியாவில் சிறப்பாகசென்னை மாகாணத்தில் தேசத்துரோகமாய், தேசியத்துக்கு விரோதமாய், சர்க்காருக்கு அடிமையாய், அதுவும் பரம்பரை அடிமையாய் இருந்து மக்களையும், நாட்டையும் நாட்டு செல்வங்களையும் பாழாக்கி வாழ்ந்து வருவது 100. க்கு 90 பேர் பார்ப்பனர்களே யாகும்.

இன்றைய எந்த காங்கிரஸ் வாதி, தேசியவாதி தேசத்தலைவர் ஆகியவர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்களின் சந்ததியார், பெண்டு பிள்ளை பெற்றோர் 100 க்கு 95 பேர் சர்க்கார் அடிமையாய் இருந்து மக்களைக் காட்டிக்கொடுத்து, தேசியத்தைக் காட்டிக்கொடுத்து தேசசெல்வத்தை கொள்ளைகொண்டு வயிறு வளர்த்து வாழ்ந்து வருவதை யாரும் பார்க்கலாம்.

வயிற்றுப்பிழைப்புக்காக ஒரு கூட்டம் தேசாபிமானமும், மற்றொரு கூட்டம் சர்க்கார் அபிமானமுமான தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்து வருவதை உணர வேண்டுமானால், ஒவ்வொரு பார்ப்பனரும் அவரவர்கள் முன் பின் சந்ததிகளை கவனித்து அவர்கள் வாழ்க்கையை க்கவனித்தால் அவர்களே அறிந்து கொள்வார்கள்.

சர்க்கார் அடிமைக்கு விண்ணப்பம் போட்டு, முயற்சித்து ஆகாயத்திற்கும், பூமிக்கு மாக பாடுபட்டு பார்த்து கிடைக்காததாலும், திருப்தியடையவழியில்லாததாலும்தான் பார்ப்பனர்கள் "தேசிய வாதிகள்" "தேசிய பத்திராதிபர்கள்" "தேசாபிமானிகள்" ஆனார்களே ஒழிய வேறு எப்படி தேசாபிமானிகள் ஆனார்கள் என்று அவர்கள் ஒவ்வொருவருடைய சரித்திரத்தையும் பார்த்தால் கண்ணாடியில் விளங்குவதுபோல் யாரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட யோக்கியர்கள் சுயமரியாதை இயக்கம் சர்க்கார் அடிமை இயக்கம், சர்க்கார் ஆதரவு பெற்ற இயக்கம் என்று சொல்வதற்கு சரியான பதில் சொல்ல அகராதியில் வார்த்தை இல்லையே என்றுதான் நாம் வருந்துகிறோம்.

பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை வையவும், தூற்றவும், பழிக்கவும், இழிவுபடுத்தவும் வேண்டுமானால் தாங்கள் யோக்கியர்கள் போல் மிதமான வார்த்தைகளால் விஷமத்தனமான விஷயங்களை எழுதி விட்டு, பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்து அவர்களுக்குக் கூலிக்கொடுத்து இழிவான முறையில் வையவும், எழுதவும் செய்து வருவதும் அவர்களது பரம்பரை வழக்கம் என்று இதற்கு முன் பல தடவை சொல்லி வந்திருக்கிறோம். இராமாணம் முதலிய கதைகளையும் ஆதாரமாக எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

உதாரணமாக சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கவும் தோழர் ராமசாமியை வைது அவரைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்யவும், காங்கிரசில் இருந்து ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு 2000 ரூ. கொடுத்து "தேசபந்து" என்னும் பத்திரிகையையும் ஆதரித்து வந்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

அது போலவே இப்போதும் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாருடைய சில பத்திரிகைகளைப் பிடித்து 1000, 500 கூலியாகவும், லஞ்சமாகவும் கொடுத்து விஷமப்பிரசாரம் செய்யச் செய்து வருவது யாரும் அறியாததல்ல.

சுயமரியாதை இயக்கமானது இவைகளை யெல்லாம் ஆரம்பத்திலேயே எதிர்பார்த்துதான் இரண்டில் ஒன்றுக்கு துணிந்து நிற்கின்றதே ஒழிய பயந்து நிற்கவில்லை என்றும், அது சுயமரியாதைக்காக—மனித சமூக சுதந்திரத்துக்காக—சர்க்காருக்கு மாத்திரமல்ல—இன்னமும் இக்காலத்தில் ஒழுக்கவிரோதம், நியாய விரோதம் தேசத்துரோகம் முதலிய பல காரியங்களுக்கும் அடிமையாகத் தயாராய் இருக்கிறது என்றும், இப்படிப்பட்ட சோம்பேறிகளும், சுயநலமிகளும், கூலிகளும், எதைச் சொன்னாலும் எப்படித் தூற்றினாலும், கவலையில்லை என்கின்ற நிலைமையில்தான் இருக்கின்றது என்றும் வினயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## லார்ட் வில்லிங்டனின் வீரமுழக்கம்.

### ஜோசியம் பலித்ததாம்.

லார்டு வில்லிங்டன் பிரபு இந்திய சட்ட சபையில் பேசும்போது சட்ட மறுப்பு இயக்கத் தலைவர்கள் தங்களுடைய பயனற்ற தடை வேலைகளை சீக்கிரத்தில் கைவிட்டு விடுவார்கள் என்று முன்னமே ஜோசியம் சொன்னதாகவும் கொஞ்ச நாளைக்கு முன் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த சட்ட மறுப்பு இயக்கம் செத்துப் போய் விட்டதென்றும் இதை பல காங்கிரஸ் தலைவர்கள் கூட அப்போதே சொன்னார்கள் என்றும், இனி அது எந்தக்காலத்திலும் தலை எடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இப்போது காங்கிரஸ் ஸ்தாபனங்களின் மீதுள்ள தடையை நீக்கிவிட்டோம் என்றும் சட்டமறுப்பு இயக்கம் அடியோடு செத்துப் போய் விட்டதென்று தான் நம்புவதாகவும் இது விஷயமாய் தான் கையாண்ட முறைகள் எல்லாம் வெற்றி அளித்து விட்டதென்றும் அவை வெற்றியளித்ததற்கு காரணம் பொது ஜனங்களுக்கு நல்ல புத்தி வந்து சட்ட மறுப்பைக் கைவிட்டதே காரணமென்றும் சொல்லி கடைசியாக இந்த அளவுக்கு வில்லிங்டன் பிரபு ஜோசியம் பலித்து விட்டது என்பதோடு இந்த ஜோசியம் வில்லிங்டன் பிரபு மாத்திரம் கூறவில்லை என்பதோடு சுய அறிவுள்ள மக்கள் 100-க்கு 99-பேர் வில்லிங்டன் பிரபுவின் பெயர் இந்திய வைசிராய் பதவிக்கு அடிபடுவதற்கு முன்பே சொன்ன ஜோசியமே தவிர வேறில்லை என்றும் சொல்லுகிறோம்.

ஆனால் ஒரு காலத்தில் ஜோசியம் பலித்து விட்டதாக சொல்ல முடியாது. என்ன வென்றால் மறுபடியும் சட்ட மறுப்பு தலை எடுக்காது என்பது. தேர்தல்கள் முடிந்து காங்கிரசுக்காரர்களும் பார்ப்பனர்களும் அதிகாரத்துக்கும் பதவிக்கும் வராமல் போகநேருமானால் அடுத்த தேர்தலுக்குள்ளாக மறுபடியும் செல்வாக்குண்டாக்கிக்கொள்ள ஏதாவது ஒரு வழிகண்டுபிடித்துத்தான் தீருவார்கள். அப்போது அவர்கள் கைவசம் வசூலித்த பணமும் வேலை இல்லாத திண்டாட்டத்தினால் கஷ்டப்படும் வாலிபர்களும் மிகுந்திருப்பார்களானால் மறுபடியும் ஒரு மூச்சுக்களிம்பி ஊசிப்பட்டாசு கட்டுடன் வெடிப்பது போல் சடபுட வென்று வெடித்து அடங்கி அதன் பயனைச் சிலருக்கு ஓட்டு வாங்கிக்கொடுத்துவிட்டு அப்புறம் தான் அடங்குவார்கள். இது பொது ஜனங்களிடத்தில் உண்மையான செல்வாக்குப்பெற யோக்கியதை இல்லாத கூட்டத்தார்களுக்கு ஏற்பட்ட தர்மமேயாகும். ஆதலால் அதை வில்லிங்டன் பிரபு அடக்கி விட்டதாக நினைப்பது போலி கௌரவமேயாகும். வில்லிங்டன் பிரபுவின் வைசிராய் ஆயுள் எவ்வளவு என்பது யாவருக்கும் தெரியும். ஆதலால் அவர் எப்போதும் தலையெடுக்க வொட்டாமல் அழுத்தி விட்டேன் என்று சொல்வது ஆயுளை கழித்துப் பார்க்காமல் பேசிய பேச்சென்றே கருதுகின்றோம். ஏனெனில் இதற்கு முன் இருந்த வைசிராய் பிரபுக்கள் ஒவ்வொருவரும் இப்படித்தான் பேசிப்போய் இருக்கிறார்கள். சட்ட மறுப்பு இந்த 14 வருஷமாய் இருந்து கொண்டு தான் வருகிறது.

ஆதலால் வைசிராய் பிரபுக்கு சட்ட மறுப்பு அடியோடு இந்தியாவை விட்டு மறைந்து போகவேண்டும் என்கின்ற எண்ணம் உண்மையில் இருக்குமானால் மக்களின் வேலை இல்லாக்கஷ்டத்தையும் தரித்திரத்தையும் நீக்க வழி கண்டுபிடிக்க வேண்டும் இல்லாவிட்டால் வாரத்துக்கொருமுறை ஞாயிற்றுக்கிழமை வருவது போலும் வருஷத்துக்கொரு முறை ஜனவரி மாதம் வருவது போலும் எலக்ஷன்கள் தோறும் சீர்திருத்தங்கள் தோறும் சட்ட மறுப்பு வந்து கொண்டுதான் இருக்கும். சட்டமறுப்பு மறைந்து போனதாகச் சொல்லுவதும் திங்கட்கிழமை விடிந்தவுடன் ஞாயிற்றுக்கிழமை மறைந்தது போலும் பிப்ரவரி பிறந்தவுடன் ஜனவரி மறைந்ததாகவும் நினைப்பது போல் தான் முடியும்.

# இதற்கு என்ன சமாதானம்? ஹிட்லரே.

ஜர்மனியின் மொத்த ஜனத் தொகை 66000000 அறுகோடியே அறுபது லக்ஷம் இதில் 3கோடியே 21 லக்ஷம். பெண்கள் 3 கோடியே 39 லக்ஷம் ஆகவே பெண்கள் ஆண்களை விட 18 லட்சம் பேர்கள் அதிகமாய் இருக்கிறார்கள் பெண்கள் அடுப்பங்கரைக்கும், படுக்கை அரைக்குந்தான் லாயக்கென்று சொல்லி இந்தியப் பெண்களைக் கூட அந்தப்படி நினைக்கும்படி செய்து விட்ட ஹிட்லரே இந்த 18 லக்ஷம் பெண்களைப் பாதிரியாகச் சொல்லுகின்றீர்களா? அல்லது சங்கராச்சாரிகளாகவும், மடாதிபதி, சம்பிரான்களாகவும் ஆகச் சொல்லுகிறீர்களா? அல்லது ஆளுக்கு 60000 பெண்களை கலியாணம் செய்துகொண்ட தசரதமகாராஜாவைப்போல் ஒரு ஐம்பது தசரத மகாராஜாவை சிருஷ்டிக்கிறீரா? என்ன செய்யப்போகிறீர். மற்றும் இந்தப் பெண்கள் சராசரி 4வருஷத்திற்கு ஒரு குழந்தை வீதம் பெற்றாலும் வருஷம் 4½ லக்ஷம் பிரஜைகள் அதிகமாகுமே ஆதலால் அதை தடுக்க என்று கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்வதற்காக இவர்களை கன்னியாமாடத்துக்காவது அனுப்ப உத்தேசித்து இருக்கிறீரா?

## இந்தியசட்டசபைத்தலைவர் ஸர். ஷண்முகம் அவர்கள்

இந்திய சட்டசபைத் தலைவர் கனம் ஸர், ஆர். கே. ஷண்முகம் கே. வி. ஐ, ஈ, அவர்கள் செப்டம்பர் மாதம் 1ந் தேதி மாலை 4-10 மணிக்கு ரயில் மோட்டார் மூலம் சிம்லாவிலிருந்து புறப்படுகிறார். 2ந் தேதி 7-10 மணிக்கு டில்லி வந்து சேருகிறார். 8-50 மணிக்கு எல்லைப்புற மெயிலில் புறப்பட்டு 3ந் தேதி 8-55 மணிக்கு பம்பாய் வருகிறார். மத்தியானம் 1-45 மணிக்கு சென்னை எக்ஸ்பிரசில் புறப்பட்டு 4ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு சென்னை வந்து சேருகிறார். 5ந்தேதி சென்னையில் தங்கிவிட்டு 6ந்தேதி இரவு கோயம்புத்தூருக்குப் புறப்படுகிறார். 7ந்தேதி காலையில் கோயம்புத்தூருக்கு விஜயமாவார்.

# காந்தி எதிர்ப்புக் கக்ஷி மீது வழக்கு

## விசாரணை ஆரம்பம்.

கல்கத்தாவில், காந்தி கொள்கைக்கு எதிர்ப்புக்கக்ஷியின் சார்பில் ஜுலை மீ 14௳ ஆல்பர்ட் மண்டபத்தில் நடந்த கூட்டம் சம்பந்தமாக கைதியான நிகரேந்து தத்தர், மஜும்தார், சாந்திராம் மண்டல், ஷம்சுத்ஹுதா, அபிலாசமன் இவர்களையும், மற்றும் 13 பேர்களையும் பிரதம மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜர் செய்தனர். சட்ட விரோதமான சபையின் அங்கத்தினர்களாக விருந்ததாகவும், போலீசாரை மிரட்டியதாகவும் எதிரிகள் மீது குற்றஞ் சாட்டியுள்ளர்கள். எதிரிகள் அனைவரும் பொதுவுடமைக் கட்சியினர். காந்திகொள்கை எதிர்ப்பு சங்கத்தின் அங்கத்தினர்களுமாவார்.

இவர்கள் மீது ஏற்பட்ட குற்றமாவது:—காந்தி கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் கலையும் வரையில் குழப்பம் நிற்க வில்லை. ஒரு எதிரி "நான் போலீசாரைச் சுட்டுவிடுவேன். என்று கூறினார். கூட்டத்திற்கு வந்திருந்த சப் இன்ஸ்பெக்டர், "நீர் மீண்டும் அப்படிக் கூறினால் உம்மைக் கைதுசெய்து விடுவேன்" என்று கூறினர். அதன் பேரில் எதிரி மஜும்தார் முன்னே வந்து, போலீசாரைச் சுடுவதாகக் கூறியதை ஆதரித்துப் பேசினார். "உம்மால் ஆனதைப்பாரும்" என்றும் கூறினர். மஜும்தார் ஆவேசத்துடன் நடந்து கொண்டதோடு, மேடையிலிருந்த மற்றவர்கள் போலீசார் மீது எறியும் நோக்கத்துடன் நாற்காலிகளைத் தூக்கினர். மண்டபத்தை விட்டுப் போகும் படி போலீசார் சொன்னதற்கும் இவர்கள் இணங்கவில்லை. ஸ்பெஷல் போலீசார் வந்தே இவர்களை வெளியேற்றவேண்டியதாயிற்று. பிறகு இவர்கள் பல தேதிகளில் கைதியாயினர்.

சிலர் பிராஸிகியூஷன் சார்பில் சாக்ஷி கூறிய பிறகு, விசாரணையை ஒத்திவைத்தனர்.

## தோழர் ராமசாமி முதலியார்

### ஏஜண்டு பதவி இல்லை சட்ட சபைக்கு அபேட்சை

இங்கர் பத்திரிகைகள் சிலவற்றில், வெளிவந்தசெய்திகள் சம்பந்தமாக திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார் தம்மை சர்க்கார் தென்னாப்பிரிக்கா ஏஜண்டு பதவி ஏற்றுக் கொள்ளும்படி கேட்டதாகவோ அல்லது பதவியைத்தாம் ஏற்றுக்கொண்டதாகவோ ஏற்பட்ட வதந்திகள் உண்மையல்லவென்று தெரிவித்துக் கொள்கின்றார். திவான்பகதூர் முதலியார் சென்னை நகரில் இந்திய சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கின்றார்.

# இந்திய சட்டசபைத் தேர்தல்.

## தோழர். V. V இராமசாமி அபேட்சகர்.

ராமநாதபுரம் ஜில்லா தேவஸ்தானக் கமிட்டி, விருதுநகர் நகரசபை ஆகியவைகளின் தலைவரும், ராமநாதபுரம் ஜில்லா போர்டு, ராமநாதபுரம் ஜில்லா கல்வி கமிட்டி ஆகியவைகளின் அங்கத்தினரும், பிரபல வர்த்தகருமான தோழர் வி. வி. இராமசாமி அவர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களின் பிரதிநிதியாக ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக இந்தியா சட்டசபைக்கு ஒரு அபேட்சகராக நிற்கின்றார்.

## தோழர் பி. சிவபூஷண முதலியார் அபேட்சை.

சென்னைக் கார்ப்பரேஷன் மாஜி சீனியர் உதவிரெவினியூ ஆபிசரும், சென்னை நகரக் கூட்டுறவு பாங்கியின் டைரக்டருமான தோழர். பி. சிவபூஷண முதலியார் தாம் இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு சென்னை நகரத்தொகுதியில் சுயேச்சையான தோரணையில் அபேட்சகராக நிற்கப் போவதாக அறிவித்துக் கொள்ளுகிறார்.

## தோழர் டாக்டர் வரதராஜலு.

### வாணியம்பாடி விஜயம்.

செப்டம்பர் மாதம் 4ந் தேதி டாக்டர் பி. வரதராஜலு அவர்கள் வாணியம்பாடி வருகிறார். அது போது அவருக்கு முனிசிபாலிட்டியார் வரவேற்புப் பத்திரம் வாசித்து கொடுப்பதென தீர்மானித்திருக்கின்றனர்.

### தேர்தல் பிரசாரம்.

இந்திய சட்ட சபைத் தேர்தல் விஷயமாக செப்டம்பர் முதல் தேதியிலிருந்து 14ந் தேதிவரையில் வட ஆற்காடு ஜில்லாவிலும், 15ந் தேதி முதல், 25ந் தேதி வரையில் கோயமுத்தூர் ஜில்லாவிலும், அதன் பிறகு சேலம் ஜில்லாவிலும் டாக்டர் பி. வரதராஜலு அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

## பறங்கிப்பேட்டை

சென்னை ஸ்தலஸ் தாபன சர்க்கார் பறங்கிப்பேட்டை பஞ்சாயத்து போர்டை கலைத்து விட்டு தென்னார்காடு ஜில்லா போர்டு ஆபிஸிலுள்ள தோழர் துரைசாமி முதலியாரை ஸ்பெஷல் ஆபீஸராக நியமித்துள்ளதாகத் தெரிகிறது.

# "மனித உற்பவம்"

இந் நூல் செப்டம்பர் முதலில் வெளிவரும். தமிழ் பாஷையிலும், மற்றும் எந்த இந்திய பாஷையிலும், இதுகாரும் எழுதிராத நூல் இதுவொன்றே. இந் நூல் நாட்டில் 30- 35 கோடி மக்களுக்கு, மனிதன் உலகில் எவ்விதம் உற்பத்தியானன் என்ற விஷயம், தெரியாமலே இருந்து வருகிறது. இந்தியாவில், தற்போது வாழ்ந்து வரும் முதியோருக்கும், இளைஞருக்கும், மனிதன் எவ்விதமாக உலகில் தோன்றி இருக்கக்கூடுமென்று சிந்திக்கக் கூடாமலே இருக்கின்றது. ஏனெனில் மதங்களாலும், ஜாதிகளாலும் கட்டுண்ட நமது இந்திய மக்களுக்கு, எங்கே மனித உற்பவ உண்மையைத் தெரிந்துகொண்டால், மதங்கள் பேரிலும், ஜாதிகள் பேரிலும் பற்று ஒழிந்து போகுமோ என்ற மோச எண்ணத்தால், மனித உற்பவத்தியைப் பற்றி, விஞ்ஞானம் கூறும் உண்மையை, நமது பாமர மக்களுக்கு எடுத்துரைக்காமலே இதுகாரும் நமது அறிஞர்களும், இருந்து வந்திருக்கின்றனர். இந்த மோசடியைப் போக்கவும், மதங்களிலுள்ள பற்று ஒழியவும் ஏற்பட்டதாகும் இந்நூல். இதனைவாசித்து, நமது பாமர மக்களுக்கு மனிதனுடைய உண்மை வரலாற்றைத் தெரிவிக்க, ஒவ்வொரு சமதர்மியும், சுயமரியாதையாரும் கடமைப்பட்டுள்ளார்கள். இதில் மனித உற்பவம், பிரபஞ்ச உற்பவம், மனித பரம்பரை முதலிய அறிய விஷயங்களை படங்களுடன் நிரூபிக்கப்பட்டுளது. இதன் விலையை சமான்மக்கள் வாங்கிப் படிக்குமாறு, குறைக்கப் பட்டுள்ளது. மனிதன் உலகில்தோன்றி சுமார் 5லட்ச வருஷமாயினும் இவனது பரம்பரை, உலக ஆரம்ப முதல் புல்லாய், பூண்டாய், புழுவாய் மீனாய், மிருகமாய், மாறி வந்து, கடந்த 5லட்ச வருஷத்திற்கு முன்பே தனது மனித உருவத்தைப் பெற்றுள்ளார் என்ற அறிய மெஞ்ஞானத்தை எடுத்துக்காட்டும் இந் நூலொன்றே தமிழ் நாட்டில் வரைந்துள்ளது.

## சமதர்ம வாழ்க்கை ஒப்பந்தம்.

கோலார் தங்க வயல் உரிகம் ஜே பிளாக்கில் தோழர் சிங்காரம் அவர்கட்கும், தோழர் அன்ன செல்வம் அம்மாளுக்கும் 26-8-34 ஞாயிற்றுக்கிழமை மாலையில் "சமதர்ம" வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் ஆர் முத்துசாமி தலைமை வகித்தார். அது சமயம் தோழர்கள் எம். ஜெயராமன, ஆர் சுப்பிரமணி, எஸ். முனிசாமி முதலியவர்கள் "சமதர்மத்திருமணம் என்பது பற்றிப்பேசினார்கள்.

# உலகத்திலேயே பெரிய அணை.

## ஈரோட்டிற்கு 35-வது மயிலில் உள்ள மேட்டூர் அணை.

ஈரோடுக்கு வடபாரிசத்தில் 35வது மைலில் புதிதாக அமைக்கப்பட்ட மேட்டூர் அணைக்கட்டு அமைந்திருக்கிறது. இது உலகத்திலுள்ள அணைக்கட்டுகளைத் தினும் பெரியதாகக் கருதப்படுகிறது. இதைக் கட்டி முடிக்க 6,800,0000 ரூபாய் செலவு பிடித்திருக்கிறது.

இவ்வணையை இம்மாதம் 21ந்தேதி சென்னை கவர்னர் சர். ஜியார்ஜ்ஸ்டான்லி பிரபு திறந்து வைத்தார். இது சுமார் 94கோடி கன அடி ஜலம் தங்கு மென்று கணக்கிடப் படுகிறது. உலகத்தின் எந்தத் தேசத்திலும் இந்த அளவிற்கு ஜலம் தங்கக் கூடிய அணைக்கட்டுகள் கிடையாதென்பதாக எஞ்சினீயர் கூறினர்.

1925ம் வருடம் ஜூலை மாதத்தில் சென்னை கவர்னர் கோஷன் பிரபுவால் இந்த அணைக்கு அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டது. என்றாலும் 1910ம் வருடத்திலே காவேரியில் அணைக்கட்டு அமைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. முதன் முதலில் திட்டம் தயாரித்த மிஸ்டர் மால் என்பவர் 4 கோடி கன அடி அளவுள்ள தண்ணீர் மாத்திரம் பிடிக்கக்கூடிய நெறிஞ்சிப் பேட்டைக்குச் சமீபத்தில் அணை அமைக்க வேண்டுமென்றும், அதற்குச் சுமா 8-கோடி ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்தார். கோயம்புத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களுக்கும் நீர்பாசனத்திற்குரிய வசதி ஏற்படுமென்று அவர் கூறினர். கடைசியாக அவர் தயார் செய்த திட்டம ஒப்புக்கொள்ளப் படவில்லை. 1910-ம் வருடத்தில் கர்னல் எல்லிஸ் என்பவர் புதிதாக ஓர் திட்டம் தயாரித்தார். அவர் சுமார் 4 கோடி ரூபாய் செலவு செய்து காவேரியில் அணைக்கட்டு அமைக்க வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தார். காவேரி ஆற்றின் அதிகப்படியான தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளும் விஷயமாகச் சென்னை மாகாண சர்க்காருக்கும், மைசூர் சமஸ்தான சர்க்காருக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு முடிவில் ஒரு சமரச மேற்பட்டது. 1925ம் வருடத்தில் இவ்வணை கட்ட இந்தியா கவர்ன்மெண்டை அனுமதி கேட்கும்போது 6 கோடி ரூபாய் பிடிக்கு மென்று கணக்குப்போட்டு அனுமதி பெறப்பட்டது.

### அணையின் பயன்.

அணையைச்சேர்ந்த தேக்கத்தில் தங்கும் ஜலத்தைப் பத்துலட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள பயிர் நிலங்களுக்குப் பாய்ச்சலாம். மற்றும் மூன்று லட்சம் பரப்புள்ள வரண்ட பிரதேசங்களைப்பயிர் செய்யலாம். புதிதாகப்பயிர் செய்யப்படும் நிலங்களில் பிரதி வருடமும் சராசரியாக 1,50,000 டன். நிறையுள்ள அரிசி உற்பத்தியாகு மென்பதிற், சிறிதும் சந்தேகமில்லை. அணைக்கட்டு வேலை முற்றுப்பெற்ற பன்னிரண்டாவது வருடத்தில் செலவு செய்யப்பட்ட பணம் முழுவதையும் சென்னை சர்க்கார் அடைந்து விடலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

### கால்வாய்களும், தண்ணீர்த் தேக்கமும்.

மேட்டூர் அணைக்கட்டிலிருந்து அநேகம் கால்வாய்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு ஓர் பிரதம கால்வாய் இருக்கிறது. கால்வாய்கள் வெட்டுவதற்கு மாத்திரம் இரண்டு கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அணைக்கட்டுத் தேக்கம் 60 சதுரமைல் விஸ்தீரண முள்ளதாக இருக்கிறது. அணை மொத்தத்தில் 5,300 அடி நீள முள்ளதாக இருக்கிறது. அஸ்தி வாரத்திற்கு மேல் அதன் சராசரி உயரம் 215 அடியாகும்; ஆற்றின் கரைக்கு மேல் அதன் உயரம் 176 அடி. மேட்டூர் அணைக்கட்டிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இயந்திரக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறைந்த செலவில் மேட்டூருக்குச் சமீபத்திலுள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் மின்சார விளக்குகள் போடலாம். தற்பொழுது செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்கிணங்க 49,000 குதிரை வேகமுள்ள மின்சார சக்தியை மேட்டூர் அணைக்கட்டில் உற்பத்தி செய்யலாம். அணையை அமைப்பதற்கு 2,06,000 டன் நிறையுள்ள சிமண்டும் Cement 55,000,000 கன அடி அளவுள்ள கற்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

### இயந்திரக்கருவிகள்.

மேட்டூர் அணையைத் துரிதமாக அமைக்கும் பொருட்டு பிரமாண்டமான இயந்திரக் கருவிகள் உபயோகப்படுத்தப்பட்டன. பழுவான கற்களைச் சுலபமாகத் தூக்கி அணை மீது வைப்பதற்கென 306 அடி உயரமுள்ள இரு பிரமாண்டமான இயந்திரக் கருவிகள் உபயோகப்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றும் சராசரியாகத் தினசரி 840 டன் நிறையுள்ள சிமெண்டையும் கற்களையும் அணைக்கட்டில் அமைத்து வந்தன. தினசரி 800 டன் நிறையுள்ள கற்களை உடைக்கவல்ல இயந்திரக் கருவிகள் உபயோகிக்கப்பட்டன. அணைக்கட்டிற்கு அவசியமான சாமான்களை மேட்டூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கொண்டுவருவதற்கென சுமார் 40 எஞ்சின்களும் 1800 சாமான் வண்டிகளுமிருந்தன அவை இரவும் பகலும் மேட்டூர் ஸ்டேஷனுக்கும் அணைக்குமிடையே ஓடிக்கொண்டிருந்தன. மற்றும் கால்வாய்கள் தோண்டுவதற்கும் மண் அள்ளிப் போடுவதற்கும் இயந்திரக் கருவிகள் உபயோகிக்கப்பட்டன. இந்த இயந்திரக் கருவிகளை ஓட்டுவதற்காக மாதமொன்றுக்குச் சராசரி 450,000 'யூனிட்' மின்சார சக்தி செலவாகி வந்திருக்கிறது.

### காவேரி ஆற்றின் சிறப்பியல்கள்.

காவேரியாறு மெர்க்காரவுக்குச் சமீபத்தில் மேற்குத் தொடர்சசி மலையில் உற்பத்தியாகிறது. அது கடல் மட்டத்திற்கு 4,400 அடி உயரத்திலிருக்கிறது. 500 மைல் தூரம் சென்றதற்குப் பிறகு காவேரி வங்காளக்குடாக்கடலுடன் கலக்கின்றது. இடை வழியில் 31,000 சதுரமையில் பரப்புள்ள சம வெளிப்பிரதேசத்திற்கு அது தண்ணீர் பாய்ச்சுகிறது. காவேரியில் கலக்கும் உபநதிகளில் முக்கியமான ஹெமாவதி, லட்சுமண தீர்த்தா, காபினி முதலியவையேயாகும். பிரஸ்தாப உப நதிகள் யாவும் மேற்குத் தொடர்ச்சி மலையிலேயே உற்பத்தியாகின்றன. மைசூர் மலைச் சாரலைக் கடந்த பின்னர் இந்த அநேகம் சிற்றாறுகள் காவேரியுடன் கலக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பவானி, அமராவதி நோயல் என்பவையேயாகும். தென் மேற்குப் பருவக்காற்றால் ஏற்படக் கூடிய மழை காவேரிக்குப் போதுமான ஜலத்தை அனுப்பிவிடுகிறது. ஆனால் வட கிழக்குப் பருவக்காற்றால் ஒழுங்காக மழை பெய்வதில்லை. இது காரணமாக விவசாயிகள் தங்களுடைய பயிர் நிலங்களுக்கு உரிய காலத்தில் போதிய ஜலம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். தென் மேற்குப் பருவ மழையில் காவேரியில் ஏற்படக்கூடிய பிரவாகத்திலிருந்து போதிய ஜலத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டால், மழையில்லாத காலத்தில் அதை விவசாயிகளுக்கு அனுப்பலாமென்று சென்னை சர்க்கார் அபிப்பிராயப்பட்டனர். இந்த எண்ணம் தான் அவர்களை மேட்டூருக்குச் சமீபத்தில் காவேரியாற்றில் அணைகட்டச் செய்தது என்று சொல்லலாம்.

---

## சுயமரியாதைத் திருமணம்.

:0:

சென்னை தோழர் M. K. அழகப்பா அவர்களுக்கும், தோழர் பௌனம்பாளுக்கும் திருச்சி புரோகிதமறுப்பு சங்கத் தினுசாவில் திருச்சியில் தோழர் E. V. ராமசாமி அவர்கள் தலைமையில் 16—9—34-ல் சுயமரியாதை முறையில் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெறும்.

---

## மோட்டார்கார் விலைரூ 270

### 18 குதிரை வேகம்

ஜெர்மனியுடனும், ஜப்பானுடம போட்டியாக ஜெக்கோஸ்லோ வேகியால் 20 பவுன் விலையில் இருவர் உட்கார்ந்து போகக் கூடிய மோட்டார் கார் ஒன்றைச்செய்து வருகிறார்கள், இந்த மோட்டார் காருக்கு 2 சிலிண்டர்கள் அமைக்கப் படுகின்றன.

---

## மணமகள் தேவை.

16 வயதுடைய தமிழ் நன்றாய் எழுதப்படிக்கத் தெரிந்த நல்ல அழகும், நடத்தையும் உள்ள கன்னிப் பெண்ணிற்கு வரன் தேவை.

### மணமகன்.

சுயமரியாதைக்கொள்கையுடையவராகவும், உத்தியோகத்தில் மாதம் 1க்கு 40 ரூபாய்க்குக் குறையாத சம்பாத்தியம் உள்ளவராகவும் இதுவரை மணமாகாதவராகவும், வெள்ளாள ஜாதியில் பிறந்தவராகவும் இருத்தல்வேண்டும். கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

D. K. V. C/o

பகுத்தறிவு ஈரோடு.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வெண்டக்காய் பதில் சொன்னதையும் பார்த்தோம்.

அரசாங்கத்தார் மேயோ அம்மையாருக்கு உதவி செய்ததற்காகவும், உள் உளவாய் இருந்ததற்காகவும் உண்மையான தேசியவாதிகள் மகிழ்ச்சி அடைய வேண்டுமேயொழிய அதற்காக குற்றம் கூறக்கூடாது என்பதே நமதபிப்பிராயம். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்து 200-வருஷமான பிறகும் இந்திய மக்களது உழைப்பின் பயனை—அவர்களது ரத்தத்தைக் காய்ச்சி இறக்கிய சத்தை சமாதானமும் நீதியுமான அரசாக்ஷி என்னும் பெயரால் மாதம்1க்கு 1000, 2000, 5000, 10000, 20000, 30000 ரூபாய்கள் என்பதாக லக்ஷக்கணக்கான பிரிட்டிஷார் அனுபவித்தும் இன்னமும் இந்தியா மிருகப்பிராயத்திலேயே இருந்து வருகின்றது என்றால் உலகோர் முன் இந்தியர்களுக்கு அவமானமா? பிரிட்டிஷ் ஆக்ஷி முறைக்கு அவமானமா என்பதை நன்றாய் நடு நிலைமையில் இருந்து பொது நோக்குடன் ஆராய்ந்து பார்க்கும்படி தேசியத் திருக்கூட்டத்தாருக்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

தோழர் காந்தி ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்களை பெரும்பான்மையான ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்யக்கூடாது என்றும் மேல் ஜாதிக்காரர்கள் சம்மதமில்லாமல் மத சம்மந்தமான பழக்க வழக்கங்களைப் பற்றி பேசக்கூடாது—தொடக்கூடாது என்றும் சொல்லி விடுவார்களேயானால் மேயோ போன்ற—அல்லாவிட்டால் லெனின் போன்ற—கமால் பாக்ஷா-போன்ற அமானுல்கான் போன்ற வெளிநாட்டார்களால் தான் மத சம்மந்தமான ஆபாசங்களும்—கொடுமைகளும்—குப்பைகளும்சாக்கடைகளும்ஒழிந்து இந்திய நாடு மனிதத்தன்மையை அடைய முடியுமே தவிர வேறில்லை என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

ஆகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த மாதிரியான கூச்சல்களுக்கு பயப்படாமல் மேயோ அம்மையாரை மறுமுறை அழைத்து வந்து இங்கு சமூகத்தின் பேராலும் மதத்தின் பேராலும் ஆக்ஷியின் பேராலும் இருந்து வரும் கொடுமைகளையும் குற்றங்களையும் உண்மையாய் அறிய அவகாசம் கொடுத்து அவைகள் சீக்கிரத்தில் ஒழிய உதவி செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

## விக்ரகத்திற்கு உதை!

### வாலிபன் சுயமரியாதைக்காரனால்?

கும்பகோணத்திற்கடுத்த தாராசுரம் அரசலாற்று படித்துறை ஓரமாயுள்ள காசி விஸ்வநாத ஸ்வாமி கோயிலுக்குள் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீ சுப்ரமணியஸ்வாமி மூல விக்ரகத்தை காலால் உதைத்து தள்ளியதாக போலீசாரால் இ. பி. கோ. 295 பிரிவின்படி சுமார் 16 வயதுள்ள ராமானுஜத்தின் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் வழக்கு நேற்று மறுபடியும் சப் மாஜஸ்டிரேட் முன் விசாரணைக்கு வந்தது. எதிரி வக்கீல் ஸ்ரீ நாராயண அய்யங்கார் பிராஸிகூஷன் 2-வது சாக்ஷியாகிய சிங்காரம் பிள்ளையை (கோயில் காவற்காரன்) மறுபடியம் குறுக்கு விசாரணை செய்யதார். சாக்ஷியங் கூறுகையில், எதிரி வலது காலால் உதைத்து இரண்டு கைகளாலும் விக்கிரகத்தைத் தள்ளியதாயும், விக்ரகம் குப்புற விழுந்துவிட்டதாயும், ஆனால் அதற்கு யாதொருவிதமான பின்னமும் ஏற்படவில்லையென்றும் கூறினார். எதிரி சுயமரியாதைக் காரர்களைச் சேர்ந்தவனானகையால், சாமி இல்லையென்று சொல்லி காலால் உதைத்ததாகவும் சொன்னார்.

வக்கீல்:—சுயமரியாதை இயக்கமென்றால் பிராமணர்களை திட்டுவது மாத்திரம்தானே உண்டு. சாமிஇல்லையென்று கூடவா சொல்கின்றார்கள்?

சாக்ஷி:— எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் சாமி இல்லை என்று தான் சொல்லுகின்றாகளாம்.

வக்கீல்:—எதிரி சாமியை கல்லென்று சொல்ல என்ன நிர்ப்பந்த மேற்பட்டது?

சாக்ஷி:— சுயமரியாதைக் காரனானகையால் அப்படி சொன்னார்.

வக்கீல்:—நான் அதைக் கேட்கவில்லை 'கல்லெ'ன்று இவர் தர்க்கம் செய்ய பிரஸ்தாப சமயத்தில் என்ன சந்தர்ப்பம் ஏற்பட்டது?

சாக்ஷி:— எனக்கு கேள்வி புரியவில்லை.

கோர்ட்டார்:—எதிரி சாமியை 'கல்லெ'ன்று சொன்னதாக நீ கூறினாயல்லவா? அப்படி அவர் திடீரென்று கூற என்ன காரண மேற்பட்டது என்றுதான் உன்னைக் கேட்கிறார்.

சாக்ஷி:— எதிரியுடனிருந்த மற்ற இரண்டு பையன்களும் சாமி தான் என்று சொன்னார்கள். ஆனால் அதை மறுத்து எதிரி 'கல்லெ'ன்று கூறினார். அடிக்கடி இம் மூவரும் இதைப்பற்றி பேசுவது வழக்கமுண்டு.

வக்கீல்:— நேரிலிருந்து தள்ளினதாகசொல்லுகிறாயே. அப்படி இருந்தால் குப்புற எப்படி விழும்?

சாக்ஷி:—பின்னால் ஓர் சுவர் இருக்கிறது. அதன் மேல் விழுந்து குப்புற விழுந்திருக்கலாம்.

கோர்ட்டார்:— ராமானுஜம் உதைத்ததாக டிரஸ்டியிடம் கூறினாயா?

சாக்ஷி:— இல்லை.

கோர்ட்டார்:—விக்ரகத்தை கீழே தள்ள, அதனடியிலுள்ள மந்திர தகடுகளைக் காணவில்லையென்று டிரஸ்டியிடம் கூறினதுண்டா?

சாக்ஷி:— இல்லை.

கோர்ட்டார்:— ஏற்கனவே விக்ரகம் மல்லாக்காக கிடந்ததென்று கூறி இருக்கிறாயே. ஆனால் இப்பொழுது, குப்புற கிடந்தது என்று கூறுகிறாயே, எது உண்மை?

சாக்ஷி:— அப்படி சொன்னதாய் ஞாபகமில்லை. நான் இப்பொழுது சொன்னது தான் சரி.

எதிரியின் வாக்குமூலம்.

இதற்கு மேல் எதிரி வாக்கு மூலம் தாக்கல் செய்கையில், தங்கள் குடும்பத்திற்கும், சாக்ஷிக்கும் சென்ற வருஷத்தில் உத்ஸவம் நடந்தபொழுது மரியாதை முதலியவைகள் கொடுக்கவில்லையென்று மன ஸ்தாபமென்றும், மேலும் சாக்ஷியின் நடத்தையை உத்தேசித்து கோயிலில் குடியிருக்கக் கூடாதென்று தன்குடும்பத்தார் ஆக்ஷேபணை செய்து வருவதால், தன் பேரில் அகாரணமாய் சாக்ஷி சொல்லுகிறானென்றும், தான் ஒருவித குற்றமும் செய்ய வில்லையென்றும் கூறினார்.

எதிரி தரப்பு சாக்ஷிகளைவிசாரிக்க செப்டம்பர் 7-ந்தேதிக்கு வாயிதா போடப்பட்டிருக்கிறது.

## பெண்களுக்கு அவசியமான கல்வி எது?

### தோழர் குஞ்சிதம் பி. எ. எல். டி. அவர்கள் பிரசங்கம்

11-8-34 சனிக்கிழமை மாலை 6மணிக்கு கீழ்ப் பாக்கம் இலவச வாசகசாலையில் "பெண்களுக்கு அவசியமான கல்வி எது?" என்பதுபற்றி தோழர் குஞ்சிதம் அவர்கள் ஆங்கிலத்தில் ஓர் உபன்னியாசம் செய்தார்கள். ஆண்களுக்கு எந்த எந்தத் துறைகளிலெல்லாம் கல்வி பயில்விக்கப்படுகிறதோ அவ்வளவு துறைகளிலும் பெண்களுக்கும் கல்வி போதிக்கப்பட வேண்டியது அவசியமென்றும், மேலும் பெண்களுக்கு உடற்பயிற்சியும், உடல் கூற்று சாஸ்திரமும் கற்றுக்கொடுக்க வேண்டியது மிக்க எல்லாவற்றையும் விட அவசியமென்றும், கர்ப்பத்தடை-பிரசவம், குழந்தையைப் போஷித்தல், சுகாதாரம், அவசர சிகிச்சை முறைகள்முதலிய துறைகளில் கல்வி புகட்ட வேண்டியது அவசியமென்றும், பெண்களுக்கு ஆண்களைப் போலவே, கலெக்டர் முதல் போலீஸ் கான்ஸ்டேபிள் வரையிலுள்ள நிர்வாக உத்யோகங்களையும் கொடுக்கவேண்டுமென்றும், பேசியதோடு உலகில் பெண்கள் எல்லாத் துறையிலும் ஆண்களோடுபோட்டிபோட்டு வெற்றி பெற்றிருக்கும் பல விஷயங்களையும் எடுத்துக்காட்டி ஒரு மணி நேரம் பேசின பிறகு, ரெவரண்ட் பிட்மன் அவர்கள் எழுந்து யாராவது கேழ்விகள் கேட்க விரும்பினால் கேட்கலாமென்று தெரிவித்தார்கள் ஒருவரும் கேட்கவில்லை. ரெவரெண்ட் அவர்கள் தோழர் குஞ்சிதம் அவர்களுக்கு வந்தனங்கூற கூட்டம் இனிது முடிந்தது.

# சமூக சீர்திருத்த மகாநாடு திருச்சி

## நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) மனித சமூகத்தில் பிறவியின் காரணமாக, உயர்வு தாழ்வு கற்பித்து அனுபவத்தில் பாவித்து வருவதும், மனிதர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் தொட நேருவதைப் பிறவிக் காரணமாகவே அசுத்தமாகவும், பாபமாகவும், கருதுவதும், பொது இடங்களான சத்திரங்கள், சாவடிகள், தெருவுகள், குளம், குட்டைகள் பள்ளிக்கூடங்கள், பிரார்த்தனை ஸ்தலங்கள், வியாபார ஸ்தலங்கள் முதலிம இடங்களின் பிரவேசத்திற்கும் பிறவி காரணமாக தடைகளும், வித்தியாசங்களும், ஏற்படுத்துவதுமான காரியங்கள் சமூக நீதிக்கும், பகுத்தறிவிற்கும், மனிதத் தன்மைக்கும், ஜீவ காருண்யத்திற்கும் விரோதமானதென்றும், எப்பாடு பட்டாவது அவைகளை ஒழிக்க வேண்டும் என்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்:—

அ. பொன்னம்பலம்

ஆமோதித்தவர்:— ராவணதாஸ்

(2) மனித சமூகத்தில் பெண்கள் ஆண்களைவிட தாழ்வாய்க் கருதப்படுவதும், சமூக வாழ்க்கையில் ஆணுக்கு ஒரு நீதியாகவும், பெண்ணுக்கு ஒரு நீதியாகவும், இருந்து வருவதும், ஆண் பெண் துணை வாழ்க்கையில் மண சுதந்திரத்தையும் பெண்களுக்கு மாத்திரம் தடுத்து பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தி வைத்திருப்பதும், துணை இழந்த பெண்களுக்கு மறுமணம் தடுக்கப்பட்டிருப்பதும், அவர்களுக்கு சொத்துரிமை வழங்காமல் இருப்பதும், புருஷர்களைப் பார்க்கக் கூடாதென்றும், புருஷர்கள் கண்களுக்கு தென்படக் கூடாதென்றும் தடுத்து, பெண்களுக்கு உரை மூடிப்போட்டு, வைத்திருப்பதும், ஆகிய காரியங்கள், அறிவுக்கும், நீதிக்கும், ஜீவகாருண்யத்திற்கும், மாறானதென்று இம் மகாநாடுகருதுவதுடன் இவைகளை மாற்றி சகல துறைகளிலும், பெண்களுக்கு ஆண்களைப்போல சம சுதந்திரங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்:—

தோழர் வல்லத்தரசு

ஆமோதித்தவர்:—

தோழர் சக்கரவர்த்தி

(3) மதுபானமானது மனிதனின் மதியை மயக்கி மானத்தை இழக்கச் செய்து, செலவை அதிகரித்து, குடும்ப வாழ்க்கையையும், துன்பமயமாக்கி வருவதால் இந்திய நாட்டில் மதுபானம் அடியோடு அகற்றப்படவேண்டுமென்று இம் மகாநாடுதீர்மானிப்பதுடன், மதுபான விஷயமாய், சர்க்கார் இதுவரை கையாண்ட முறைகள், பெரிதும், மதுபானத்தை மனிதவர்க்கத்துக்குள், அதிகப்படுத்தவும், சர்க்காருக்குஅதிக வரும்படி ஏற்படவும், தான், பயன்பட்டு வருகிறதே ஒழிய, அநுகூலமான பயன் ஏதும், ஏற்படவில்லை என்று இம் மகாநாடு கருதுகின்றது.

### பொருளாதாரம்

(4) அரசாங்க வரி வருமானமும் வரிதிட்டமும், நாளுக்கு நாள் உயர்ந்துவந்தும் செல்வவான்களின் செல்வமும், வருவாயும், நாளுக்கு நாள் வளர்ந்து வந்தும், இன்று நாட்டில் சரீரத்தால் பாடுபட்டு உழைத்து வரும், பாட்டாளி மக்களுக்கு, சாப்பாட்டிற்கே, திண்டாட்டமாகவும், கல்வி, வயித்தியம், சுகாதாரம், குடியிருப்பு, ஆகிய வசதிகளுக்கு, அடியோடு மார்க்கமில்லாமல், இருந்து வருவதோடு கோடிக்கணக்கான மக்கள், படித்தவர்களும், பாமர மக்களுமாய், வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டு, குடும்பத்தோடு, பட்டினிக்கிடந்து மாள வேண்டியவர்களாய் இருப்பதால் அரசாங்கமும், பொது நல சேவைக்காரர்கள் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களும், இதை உடனே முக்கிய காரியமாய், கவனித்து தக்கது செய்யாவிடில், மனித சமூக வாழ்க்கைக்கும், சமாதான வாழ்க்கைக்கும் பெரியதொரு நெருக்கடி ஏற்படக்கூடுமென்று இம் மகாநாடு எச்சரிக்கை செய்கின்றது.

### சமூக சீர்திருத்தம்

(6) அரசாங்கத்தார் மத சம்மந்தமான விஷயங்களில் நடு நிலைமை வகிப்பதாகச் சொல்லுவதும் அரசியல் வாதிகள், சமூக சீர்திருத்தக்காரர்கள், என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள், "மதக் கொள்கைகளையும், மதச் சம்பிதாயங்களையும் காப்பாற்றுவதாகவும், எவ்வித சீர்திருத்தங்களுக்கும் சட்டங்கள், செய்யக் கூடாதென்றும் இவைகள் சம்மந்தமான எந்தக் காரியங்களுக்கும் பெகுஜன அபிப்பிராயப்படியே நடக்கவேண்டும்", என்றுசொல்வதும், சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதாய்இப்பதாலும் இதுவரை முட்டுக்கட்டையாய் இருந்து வந்திருப்பதாலும், அவ்வப்பிராயங்களை இம் மகாநாடு பலமாய் கண்டிப்பதுடன், அவற்றை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அவ்விரு கூட்டத்தாரையும் இம்மகாநாடு வலியுறுத்துகிறது

(7) விபசாரத் தொழிலைத்தடுக்கும், நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கும், விபசாரத்தடைச்சட்டமானது, மிக அவசியமானதென்று கருதுவதோடு ஷை சட்டத்தை, இந்தியா பூராவிற்கும், அமுலுக்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டிய, அவசியத்தை வற்புறுத்துவதோடு ஷை சட்டத்தால், அடியோடு விபசாரத்தையே தடுக்கும்கும் நிலைமையில் ஷை சட்டத்தை திருத்தவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

(8) விவாக சம்பந்தமாக செய்யப்பட்டிருக்கும் சாரதா சட்டத்தை பஹிரங்கமாக மீறவேண்டுமென்னும்நோக்கத்துடன் செய்யப்பட்டு வரும் பாலிய விவாகத்தை தடுக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று இந்தியா கவர்மெண்டார் கூறியிருப்பதைக்கண்டு வருந்துவதோடு, ஷை சட்டத்தில் தனிப்பட்ட நபர்களால் வழக்கு தொடருவதற்கு விரோதமாய் இருக்கும் இடையூறுகளையும் எடுத்து விட்டு ஷை சட்டத்தின் படி அரசாங்கத்தாரே தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

(9) மதத்தின் பெயரால் இந்நாட்டில் கையாளப்படும், ஜீவஹிம்சையை எந்த முறையிலும், தடுக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்துவதோடு, அதை சட்ட மூலமாய் தடுக்க தாமதிக்கக்கூடாதென்றும், சமீபத்தில் சென்னை கவர்ன்மெண்டார் அலகு குத்திக் கொள்வது போன்ற செய்கைகளை தடுத்துவருவதை இம் மகாநாடு பாராட்டுகிறது.

---

சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தார்
புதுவை பாரதிதாஸன் இயற்றிய
"இ ர ணி ய ன்"
என்ற கற்பனைக் கதையை 9-9-34 ஞாயிறு
மாலை 5-30 மணிக்கு
சென்னை வி. பி. ஹாலில்
நடிப்பார்கள்.
ஆண்கள்:—ரூ. 10, 2, 1, அணா 8, 4.
பெண்கள்:—ரூ. 1, அணா 8, 4.

## தோழர்கள் ஆர். சசிவர்ணம்-கமலம்.

### ரிஜிஸ்ட்டர் கலியாணம்.

சிவகெங்கை சுயமரியாதை இயக்கத் தோழர் ஆர். சசிவர்ணம் அவர்கட்கும் விருதுநகர் தோழர் ஞான சௌந்திரி, கமலம் அவர்கட்கும் 22-8-34 பகல் 12 மணிக்கு மதுரையில் கல்யாண ரிஜிஸ்ட்டர் முன்பாக இருவரும் வாழ்க்கைத் துறைவளாகிக்கொண்டதாகப் பதிவு செய்து கொண்டார்கள்.

அதன் பிறகு மதுரை பிட்டுத் தோப்பு தெரு 36 நெம்பர் வீட்டில் பகல் 1மணிக்கு மணமக்களிருவரும் மலர் மாலை மாற்றிக்கொண்டார்கள். அது சமயம் தோழர் அ. பொன்னம்பலம், கே. மாதவன் ஆகியவர்கள் மண வாழ்க்கை ஒப்பந்தம் "என்பது குறித்துப் பேசினார்கள். மணமகன் தோழர் ஆர். சசிவர்ணம் அவர்கள் இந் நிகழ்ச்சிக்காக வந்திருந்த தோழர்கள் யாவருக்கும் நன்றி கூறினர். இந் நிகச்சிக்கு சிவகெங்கை, விருதுநகர், மேலூர், காரைக்குடி முதலிய இடங்களிலுமிருந்தும் பல தோழர்கள் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் சிறப்பாக சமபந்தி விருந்து ஒன்று நடைபெற்றது. மணமக்களிருவரும் மணமகள் வீட்டிற்கு மாலை 4 மணிக்கு விருதுநகர் புறப்பட்டார்கள்.

---

## மேலூர் சுயமரியதைப் பிரசாரம்.

மேலூர் செக்கடி மைதானத்தில் 23-8-34 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு தோழர் எ. வேலுச்சாமி அவர்கள் தலைமையில் ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் எம். பொன்னையா அவர்கள் நமது கடமை என்பது குறித்துப் பேசினர்.

அதன் பிறகு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சமூக முன்னேற்றம் என்பது பற்றி பேசினர் தலைவர் முடிவுரையுடன் இரவு 9மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது இரவு தோழர் எ. சிவசாமி நாதன் அவர்கள் இல்லத்தில் உணவு அருந்தி 24-8-34 காலை 9மணிக்கு காரைக்குடிக்கு பிரயாணமானார் தோழர் அ. பொன்னம்பலனார்.

---

## போட்டிப்பந்தயம்.

### பெண் வெற்றி.

அமெரிக்க தலைநகரமான நியூயார்க் நகரத்திலே பனிக்கட்டியில் வெகு நேரம் உட்காந்திருப்பவருக்குப் பரிசளிக்கும் போட்டிப்பந்தயத்தில் வெற்றியுற்ற பெண் 4 கன அடி பனிக்கட்டியில் 5½ மணி நேரம் உட்காந்திருந்தாராம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சியால் தம் உடம்பில் சவுக்கடியடித்துக்கொண்டு, இரத்தத்தை வெளிப்படுத்துவதும் உண்டு.

பெரிய நகரங்கள் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு மதத்திற்குரிய சட்டங்களைத் தம் வரம்பு மீறுது செய்யும் அதிகாரம் வாய்ந்த ஒரு ஆசாரியனின் கீழ், ஒப்புவிக்கப்பட்டிருந்தன. ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடையே நிகழும் பாப மன்னிப்பு, உடைபடாத முத்திரைகளைப்போலவே, மெக்ஸிகர்களிடையேயும் பாப மன்னிப்பு இருந்து வந்தது. இரகஸிய கொலைக்குற்றங்களைக்கூட மன்னித்து வந்தனர். இந்த விஷயத்தில் மெக்ஸிகர்களுக்கிடையே இரண்டுவித விசேஷம் உண்டு. அவைகளாவன:—

1. ஒருமுறை பாபமன்னிப்புக்கேட்ட ஒருவன் மறுபடியும் பாப மன்னிப்புக் கேட்டால், அது மன்னிக்கத் தகாததாகக் கருதப்படும். பாபம் செய்ததைத்தானே ஒப்புக்கொள்ளுவதை அங்கீகாரம் செய்வது மனித வாழ்க்கையில் ஒரே முறையாகும். ஒருவனுடைய பாபவுருக்கம் அவன் மன சாட்சியை உறுத்தாது போதும், எஞ்சிய அநியாயத்தை உடனே இயற்றிய போதும், மேற்படி பாப மன்னிப்பு வித்தியாசப்படும்.

2. கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பெறும் கோர்ட்டுகளில் கூட மதத்தலைவர்களின் அதிகாரஞ் செல்லும். ஒருவனை தண்டிப்பதைத் தடுக்க அவர்களால் முடியும். சிறை செய்வதைக்கூட குருமார்கள் தம் அதிகாரத்தால் தடுத்து விடலாம்.

அத்தேசத்தான் ஒருவன் பாபமன்னிப்பின்போது தன் பிரார்த்தனையில் பின் வருமாறு கூறுகிறான்:—

"ஓ இரக்க முள்ள கடவுளே! ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கிடக்கும் இருள்போன்ற இரகஸியங்களை அறிகின்ற நீ, என்னை மன்னித்தருள்க! வானலோகத்துயரீர் பேரல, ஆன்மாவின் அழுக்கைக்கழுவ, நீ கீழே இறங்கி வருள்க! இந்த ஏழைமனிதன் அறிவு சூன்யததால் பாபத்தைச் செய்திருக்கிறான்; அது இவன் பிறந்த ஜாதகப்பலன் என்பதை நீ முற்றும் அறிவாய்!"

இந்த மாதிரி அவன் ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்த பின்பு, பாப விமோசனத்திற்காக அவனுக்கு அளவிறந்த உபதேச மொழிகள் போதிக்கப்படுகின்றன. இனியாவது பாபம் செய்யாத வழியில் அவன் மனத்தைத் திருத்திக்கொள்ளச் சொல்லிய பின்பு, அவன் தற்சமயம் செய்த பாப விமோசனத்திற்காகச் சில சில்லுண்டி மண்டபப்படிகளைச் செய்யச் சொல்லியும், முக்கியமாக நரபலிக்காக ஒரு அடிமையாளை உடனே கொண்டுவந்து கொடுக்கும்படித் தெரிவித்தும், ஆசாரியன் பாப மன்னிப்புச் சடங்கை முடிக்கிறான். என்ன புத்திசாலித்தனம்? பாப மன்னிப்பிற்காக நரபலி!!

குருமாரின் அதி முக்கிய கடமைகளில் கல்வி அபிவிருத்தியே தலைசிறந்தது. கோவிலின் மதிலுக்குள்ளேயே கல்வி மடங்கள் கட்டப்பட்டிருந்தன. அந்த மடத்தில் ஆண் பெண் வித்யாசமின்றிப் படிக்கலாம். மாணவர்கள் மிகப் பால்ய வயதிலேயே பள்ளியில் சேர்க்கப்படுவாராயினர். மாணவிகள் பூசாரிச்சிகளின் தக்க பாதுகாப்பில் விடப்பட்டனர். பெண்களிலும் மத உத்யோகஸ்தர் உண்டு. அவர்கள் பலி கொடுக்கும் உத்யோகத்தில் மாத்திரம் அநுமதிக்கப்படவில்லை. மேற்படி கல்லூரியில் மாணவர்கள் மதக் கடமைகளைப் பற்றி நன்கு பயின்று வந்தனர். தெய்வங்களிருக்கும் மூலஸ்தானங்களையும் மற்றும் பல விடங்களையும், நறுமலர்களால் நன்கு அலங்கரிப்பதும், ஆகுதித்தீயை பக்தியோடு வளர்த்தலும், உற்சவங்களிலும், பஜனைக் கோஷ்டிகளிலும் கலந்து கொள்வதும் மாணவர்களின் இன்றியமையாக் கடமைகள். கல்வித் துறையை அவர்கள் உயர்தரம், மத்யதரம் என்ற இரு பிரிவாகப் பிரித்திருந்தனர். 'கால்மிகாக்' (Calmecac) என்று அவர்களால் குறிக்கப்படும், உயர்தரக் கலாசாலையில் வாசிக்கும் மாணவர்கள் வியாபாரம், விவசாயம், இராஜீய விவகாரம், வான சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், முதலியவைகளைப் பற்றி விரிவாகப் படித்துணர்ந்து வந்தனர். மாணவிகள் பெண்களுக்குரிய பல தொழில்களில் தேர்ச்சி பெற்று வந்தனர். விசேஷமாக, பலிபீடங்களின் மேல் போர்த்தும் உறையாடைகளைப் பின்னுவதற்கும் நெய்வதற்கும் பழக்கப்பட்டு வந்தனர். இரண்டு வித மாணவர்களின் ஒழுக்க நெறியின் சம்மந்தமாக விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. மரியாதையும், ஒழுக்கமும் முக்கியமாக வழக்கத்திலிருந்து வந்தன. ஒழுக்கம் வழுவியவர்களும், ஏனைய குற்றம் செய்தவர்களும் தண்டனை யடைந்து வந்தனர். இந்த விஷயத்தில் மரண தண்டனை கூட அமுலில் இருந்து வந்தது. இந்தக் காரணமாகவே, அவர் தம் கல்வி ஓங்கலாயிற்று. ஆனால் விருப்பத்தாலல்ல; பயத்தால்.

கல்யாணம் செய்யத் தக்க வயது வந்தவுடனே, அல்லது லௌகீக வாழ்கையில் ஈடுபடத் தக்க வயது வந்தவுடனே, மாணவர்கள் பெருஞ் சடங்குகளோடு மடத்திலிருந்து நீக்கப்படுகின்றனர். பெரிய குருக்களின் உத்தரவாதமுள்ள பொது வாழ்க்கையைப்பற்றித் தெரிவிக்கக் கூடியதாய் இருந்தது. இது குருமாரின் தந்திர யுக்தி அவர்களே கல்வி இலாக்காவை கைப்பற்றிப் போதித்து வரும் வேலையை வைத்துக்கொண்டிருந்த படியால், இளைஞர்களின் மிருதுவான உள்ளத்தைத் தம் இஷ்டப்படி இணங்குமாறு கரைக்கச் சக்திவாய்ந்தவரா யிருந்தனர். ஓர் இராணுவ வீரனின் இரும்பொத்த மதப்பற்று ஒரு காலத்தில் அழிந்தலுமுண்டு.

ஒவ்வொரு முக்கியமான கோவிலுக்கும், குருமார்களின் செலவிற்காகத் திரண்ட நிலங்கள் விடப்பட்டிருந்தன. இது, அரசர்களின் பக்தியாலும், நம்பிக்கையாலும் நாளுக்கு நாள் பெருகி வந்தது. கடைசி மோன்டிஸூமா Monteyuma) என்னும் அரசன் காலம் வரையில் மேற்படிச் சொத்துக்களைத் தின்று கொழுத்ததோடு, ஒவ்வொரு ஜில்லாவாகக் கைப்பற்றி வந்தனர். அந்த ஆஸ்திகளைத் தம் ஆளுகையிலே வைத்திருந்தது குறிப்பிடத் தக்கது மதச் சங்கத்தின் சுதந்தர நடத்தையாலும், தாராள நடத்தையாலும் அவர்கள் தம் எண்ணத்தை எளிதாக நிறைவேற்றி வந்தனர். கொழுத்த ஆஸ்தியின் சுகானுபவத்திலிருந்ததன்றி, அவர்கள் மாணவருக்கு ஊட்டிய மத பக்தியாலும், மூட புத்தியாலும் விசேஷமாகச் சிறப்பு செய்யப்பட்டனர். அவர்கள் வசமிருந்த செல்வத்தில் தேசிய மத வழிபாட்டிற்கும், உற்சவங்களுக்கும், மற்றும் பல வற்றிற்கும் செலவானதுபோக பாக்கியை ஏழை எளியோருக்கு தர்மமாகக் கொடுத்துவிடுவார்கள். அவர்களுடையஎல்லாக்கடமைகளும் மதேய நெறிக்கோர்ட்டுகளின் மூலமாகக் கட்டளையிடப்பட்டு வந்தன.

"டியோகாலிஸ்" (Teocallis) என்னும் மெக்ஸிகர்களுடைய கோயில்கள் எண்ணிறந்தனவாகக் காணப்பட்டன. சில முக்கிய நகரங்களில் நூற்றுக்கணக்கான கோவில்களிருந்தன. அவைகள் ஒவ்வொன்றும் மாளிகையினும் அழகு பெற்றனவாகத் தென்பட்டன. மண், சாந்து, கல், முதலியவைகளைக் கொண்டு உறுதியாகக்கட்டப்பட்ட உயர்ந்த சிகரங்களும், கோபுரங்களும், கண்ணைப்பறிக்கும் காக்ஷியை உடையவாக இருந்தன. அந்தக் கோபுரங்கள் பழைய காலத்து எகிப்தியர்களின் கோபுரங்களை ஒத்திருந்தன. அவைகளுள் பலவிற்றின் அடிவாரம் சுமார் நூறடி சவுக்கத்திற்கு மேல் பெரியதாகவும், அதற்கு மேல் உயரமாகவும் இருந்தது. அக்கோபுரத்தின் உயரப்போக்கில் ஐந்துபெரிய அறைகள் பிரிக்கப்பட்டிருந்தன. அவ்வறைகள் கீழிருந்து மேலே போகப் போக, ஒன்றைவிட ஒன்று சிறியதாக விருந்தன. வளைந்ததாக வேனும், நேராகவேனும் கோபுரத்தின் சிகரத்திற்குப் படிக்கட்டுகள் செல்லும். எனவே படிக்கட்டின் மூலமாகத்தாராளமாகப் போக்கு வரத்துச் செய்யக்கூடியதாக விருந்தது. கோபுரத்தின் உச்சியில் சுமார் 40- அல்லது 50 அடி உயரத்தில் ஒன்றாவது இரண்டாவது கும்பம் கட்டப்பட்டிருக்கும். மற்ற மண்டபங்களிலும், சிற்சிறு கோவில்களிலும், பல தெய்வங்களின் உருவச் சிலை வைக்கப்பட்டிருந்தன—ஏன்?- ஆவாகனம் செய்யப்பட்டிருந்தன. மகாகோபுரத்தின் முன்னதாக நரபலியிடும் ஒரு பெரிய கல்லும், இரண்டு பலி பீடங்களும் காணப்பட்டன. அப்பலி பீடங்களின் மேல் பரிசுத்த அக்கினி வளர்க்கப்படும். மெக்ஸிகோவின் ஒரு பிரமாண்ட ஆலயத்தின் சுற்றெல்லைக்குள் சுமார் அறுநூறு பலி பீடங்கள் வரையில் இருந்ததவென்று அறியப்படுகிறது. நள்ளிருட் சூழ்ந்த இராக்காலங்களில் பலி பீடத்தின் மேல் எரியும் தீ லட்ச தீபம் போல தோற்றும்!

நடுக்கத்தைக் கொடுக்கும் நரபலி நடந்து கொண்டிருக்கும்; ஜனங்கள் உயர்ந்த கட்டிடங்களின் மீது ஏறி குருமாரின் ஊர்வலத்தைப்பார்ப்பார்கள்; மேற்படி எல்லாக்குழப்பத்தையும் ஒருவன் பார்த்துத் தனியாகச் சந்திப்பான். அங்கு நடப்பதெல்லாம் சிறிதும் அறிவுக்கு ஒவ்வாததாகக் காணப்படுகிறது. ஆனால் அவனால் ஒன்றுஞ்செய்யமுடியாது! மதத்தையழிக்கவோ, தன் எண்ணத்தை வெளியிடவோ அவனால் முடியாது. இந்த விஷயம் நமக்கு அனுபவ பூர்வம்! மெய்யறிவு மூடத்தனத்தை மெய்யாக அறிகிறது. இது முற்றும் உண்மை.

மேற்படி மெய்யறிவு,அவர்கள் தம் கோவில் திருவிழாக் காலங்களில் எல்லையில்லாமல் சுரந்து பெருகுகின்றது. ஒவ்வொரு மாசமும் அவர்களுடைய தெய்வத்திற்கு அர்பணந்தான். ஒவ்வொருவாரமும்—என்?— ஒவ்வொரு நாளும் சில முக்கிய திருவிழாவை அடக்கிக் கொண்டிருப்பதை அவர்கள் தங்கள் பஞ்சாங்கங்களிற் காணலாம். மேற்படி பஞ்சாங்கத்தைக்கொண்டு, வாழ்க்கையின் சாதாரண கடமைகளும், வேலைகளும் அவர்களுடைய சரியான மத நடவடிக்கையோடு ஒத்திருக்குமா என்பதை யறிதல் மிகக் கஷ்டம். அனேக திருவிழாக்கள் சுலபமாகவும், சொகுசாகவும், இருக்கும். பஜனை, கீர்தனம், முதலியவைகளில் ஆண் பெண் இரு பாலரும் கலந்து கொள்வார்கள். ஊர்வலம் நடைபெறும்; அப்போது பெண்மணிகளும், பிள்ளைகளும், தலையில் இரத்தினக்கிரீடம் அணிந்து கொண்டும் பழவர்க்கங்கள் நிறைந்த தட்டுகளைக் கையில் ஏந்திக்கொண்டு செல்வார்கள். இந்த வைபவம் நடக்கும் போது நூற்றுக்கணக்கான பிராணிகள் பலி பீடத்திற்கு இரையாகும். இரத்தம் துரைத்த பெரு வெள்ளம் குமிழ் இட்டுக் கொண்டு விரைந்தோடும். மிருகங்களை மாத்திரம் பலியிடும் உற்சவம் என்பது அவர்கள் கருத்து. நரபலி கொடுப்பது அவர்களுடைய பெரிய உற்சவம்.

(தொடரும்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

க்கைக்குச் செல்லல்" (On going Nuddism) என்ற நூலையும் பல இதர நிர்வாண இலக்கியங்களையும் மொழி பெயர்த்து வெளியிடுவோம்.

நிர்வான வாழ்க்கையால் ஆத்மா விற்குண்டாகும் கறைகள் மாறி, ஆன்மா விரைவில் பரிசுத்த மடைந்து இவ்வுலகில் மட்டுமின்றி மறுவுலகிலும் ஆன்மா இன்பத்தையடைவதுடன் ஆண் பெண் தன்மைகளை அறிந்து ஏற்றவர்கள் இசைந்து வாழவும் ஹேது இருக்கிறது என்று நிர்வாண ஞானிகள் கூறுகின்றார்கள்.

### நிர்வாண வளர்ச்சி.

பிரான்ஸ்தேசம் மட்டுமல்ல. ஐரோப்பாவே வரவர ஆடைகளை குறைத்து வருகின்றது. எவ்வளவு தூரம் உடல் தெரியும்படி உடையணிகின்றோமோ, அதுவே சிறந்த நாகரிகமென்று கருதப்படுகின்றது. இப்பொழுது பெரும்பாலும் பெண்கள் அரையிலிருந்து கழுத்து வரையுந்தான் ஆடையணிகின்றார்கள். அதிலும் கைமுழுவதும் ஆடையே கிடையாது. பாதி ஸ்தனங்கள் தெரியுமாறு ஆடையணிவதே சிறந்த நாகரிகம். எனவே இவ்வளவு தூரம் நாகரீகம் அடைந்த பெண் மக்கள் முற்றிலும் நிர்வாணமாவது எளிதல்லவா? இந்த அரை குறையான நிர்வாண நாகரீகம் மக்கள் வாழ்விற்கு பல இடையூறுகளை இயற்ற வல்லது என்று பிரஞ்சு தேசத்து நிர்வாண மருத்துவர்கள் புகன்று வருகின்றார்கள். ஒன்று முழுதும் ஆடையணிதல் வேண்டும். அன்றேல் முழுதும் நிர்வாணமாயிருத்தல் வேண்டும் என்று கூறி வருகின்றார்

### பத்திரிகை.

பிரான்சில் பல பத்திரிகைகள் நிர்வாணிகளால் பிரசுரிக்கப்பட்டு வருகின்றனவென்றாலும் உயர்தர மருத்துவப்பட்டம் பெற்ற டாக்டர்களெல்லாம் நிர்வாண இயக்கத்தை ஆதரித்து அங்கிருந்துவெளிவருவது "இயற்கை" (Nature) என்னும்பத்திரிகையிலேதான். அப்பத்திரிகையில் அறிஞர் ஒருவர், நமது உடலை, உடையால் மறைப்பதானது தேக அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாயிருந்து வருகிறது. அதுமட்டுமல்ல உடல் நலங்குன்றி வளர்ச்சியும் தடைப்படுகின்றது. நமது உருப்பிற்கு இயற்கையாயுள்ள வேலைகளை விட நாம் ஆடை அணிவதில் அங்கங்கள் அதிகமாகத் தாங்கிக்கொண்டிருக்கும்படியான வேலையொன்றும் அதிகமாகின்றது. தேகத்திலுள்ள எண்ணிறந்த மயிர்த் துவாரங்கள் அடைபட்டு உடலினின்று வெளியாகும் வியர்வை, வெப்பம் முதலியவைகள் வெளியாகாமல் தேகத்திற்கு பலவித நோய்களுண்டாகின்றன. இதற்கெல்லாம் தக்க ஔஷதம் இயற்கை வாழ்வேயாகும். இயற்கையோடியைந்த வாழ்வே நிர்வாண வாழ்வேயாகும் என்று கூறுகின்றார்.

## "இரணியன்"

புதுவை பாரதிதாசன் அவர் அவர்களால் நவரசத் தேனொழுக எழுதப்பட்ட "இரணியன்" என்னும் புதிய நாடகம் சீர்திருத்த நாடக சங்கத்தாரால் 9-9-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு சென்னை வி. பி ஹாலில் நடத்தப்படும்.

நாடக பாத்திரங்கள்.

இரணியன் எஸ். குருசாமி பி. ஏ., பிரகலாதன் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல், சேனாதிபதி எஸ். ரங்கநாதன், காங்கேயன் டி. சம்பந்தம், கஜகேது டி. என். ராமன், ரிஷி எம். கே. அழகப்பா, லீலாவதி கெ. கிருஷ்ணசாமி, சித்திரபானு எம். எஸ். முத்து எனக்காரிய தரிசிகளான டி. சம்பந்தம், எஸ். ரங்கநாதன் எழுதுகிறார்.

### அகில பிரஞ்சு நிர்வாண சங்கத்தின் கிளைச்சபைகள்.

1) ஏ. ரோஸீ
8. ரூ. எம்பெரெயூர்
வெஸ்பேசியன்
ஆல்ஜியர்.

2) ராம் யேல்,
கிளப் ஜிம்னிக் எட்
நேச்சரிஸ்ட்
ஜெ. ஹே. மோவித்
லூமெட்.

3) அஸோஷியேஷன் லிப் ரேகல் சரிஸ்ட் பிராவென்ஸ் பிரசிடேண்ட்
எம். வெண்டிஸ்
8. ரூ. பேராடிஸ்
டெல்டிரேசன் 10-70
மார்சேய்லஸ்.

4) க்ரூப் ஜிம்னிகூப்
எட்நேச்சரிஸ்ட்
நைஸ். 4. ஓ. ரூ. ரீபப்ளிக்
கிஸ்ஸா.

5) வெஸ் ஆமிஸ்டி
விவ்ரெ
(ஸ்பார்டாகிளப்)
எம் கே. டி. மாங்யாட்
ரூ. டி. லாஜெல் பாக்க
பாரீஸ்.

6) விச்ஜிமினிச்டி
லாகோட்டி அஸூர்
காவேரி டிஸ் அன்றேசெஸ்
13. ரூ. அல்பெர்டி கிலஸா.

7) விக் நேசசரிஸ்ட்
(பிவியோபாலிஸ் எட்
ஹெலியோ பாலிஸ்)
டாக்டர் ரேர் வெல் ரூசிமரேலா
பாரீஸ்.

8) கிளப் ஜிம்னிக்
டி. பிரான்ஸ்
6. ரூ. சேர்பெண் 28
பாரீஸ்.

9) போயர் நேச்சரிஸ்ட
8. ரூ. டே செண்டியர் பாரீஸ்.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
சேப்ரேரட், நாகர்கோவில்.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டிரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்.

## பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.
விலை அணா 0—1—0.
கிடைக்குமிடங்கள்:—
குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.
R. கிஸன்,
கோவை.

## சமதர்மக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் இயற்றியது.
விலை பை. 6.
கிடைக்குமிடங்கள்:—
குடிஅரசு பதிப்பகம்
ஈரோடு.
சமதர்மக் காரியாலயம்
ஜோலார்பேட்டை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

## இங்கிலீஷ் பாஷை பேச, வாசிக்க, எழுதத்தெரியுமா?

"கடந்த 13 வருஷகாலமாய் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்பட்டுவரும் நமது ஸ்பேஷல் மேட்ரிக்குலேஷன் கோர்ஸ்களை மாதா மாதம் சொற்ப தொகை அனுப்பி படிக்கலாம். விரும்பினால் சர்க்கார் பரீக்ஷைகளுக்கும் போகலாம். புது லிஸ்ட் ஆரம்பித்து விட்டது. விபரத்திற்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

அன்டையன்ஸ் காலேஜ்,
ஆறுமுகனேரி S. I. R.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

## யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.

(3ம் பக்கத் தொடர்ச்சி).

றும் பாதிரிகளின் போதனை அதனைத் தடைசெய்துவருகிறதென்றும் முடிவு செய்தான்.

தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை வீணே போக்கி விட்டதை உணர்ந்தான். அவன் தனது வேலையில் வெறுப்புற்றான். இதர மனிதர் தங்களின் வாழ்க்கையில் அடையும் இன்பத்தைத் தான் இழந்து விட்டதற்காக வருந்தினான். துக்க சாகரத்தில் அழ்ந்தான் ஆயினும்அவன் என்ன செய்யக்கூடும்? அவனுக்கு இது சமயம் ஏதோ நர்ப்பத்தைந்து. வயது சென்ற தாய், தந்தையரும் கடவுளின் மனிதன் என்ற முறையில், இவனிடம் அன்பு செலுத்தும் எண்ணற்ற சுற்றத்தினரும் சூழ இருக்கிறான். இபபாதிரி உத்தியோகத்தை விடுவதோ மனித நிற்பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதோ அவனது தாய் தந்தையரது மனத்தைப் புண்ணுக்குவதுடன் உற்றார் உறவினரின் வெறுப்புக்கும் ஆளாவான். தனது ஆயுளையே அர்ப்பணம் செய்து விட்டதாக பிரமாணம் செய்து கொடுத்துள்ள ஓர் மதத்திலிருந்து பிரிவதானல் அம்மதத்தினர் கொபத்திற்கு ஆளாக நேரிடும். தனது இஷ்டமான ஒரு பெண்ணை மணந்து சாதாரண வாழ்க்கையில் அமருவதென்றாலோ அது ஒரு கஷ்ட சாத்தியமான காரியமாகவும், கத்தோலிக்கர் எல்லோராலும் சமூக பகிஷ்காரத்திற்கு ஆளாக்கப்படுவான் என்பதையும் உணர்தல் வேண்டும்.

தாய்தந்தையரையும், உற்றார் உறவினரையும் விடுத்து அறிமுகமில்லாத தூர தேசத்திற்குச் சென்று புதியதோர் வாழ்க்கையை ஆரம்பிக்கலாமென்றாலோ அது மனதிற்கொவ்வாத காரியம். எனவே அவன் இனி ஒரு யோக்கியமான பாதிரியாக வாழ முடியாது. இந் நிலையில் அவன் சுதந்திர உணர்ச்சியோடு நேரிய முறையில் நடக்க முடியாது போகின்றது. ஆகவே சகல நம்பிக்கையும் இழந்து சஞ்சல மனத்தினனுக வாழ்ந்து வருகிறான்.

இந் நிலையில் அநேக ஆயிரம் பாதிரிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் உண்மையிலேயே அன்புடைய இளகிய மனத்தினராயிருந்தும் தாங்கள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் ஆர அமர யோசியாது செய்த பிரதக்கினையின் பயனாய் இன்று மனித சமூகத்தின் இயற்கையாய் அடையவேண்டிய சாதாரண இன்பங்களைக் கூட அநுபவிக்க முடியாது தடுக்கம்பட்டிருக்கின்றனர். இத்தகைய தப்பான வழியில் தள்ளாடி வாழும் பரிதாபத்திற்குரிய பாதிரிகள் உண்மையிலேயே நகர வேதனையில் சிக்கியிருப்பதாகச் சொல்லலாம்.

இனி கன்யாஸ்திரிகளை கவனிப்போம். அவர்கள் தாங்கள் தங்கள் வாழ்க்கையை அர்பணம் செய்யும் காலத்தில் எவ்வித ஆசையோடும், எண்ணத்தோடும் தத்தம் செய்தார்களோ அவைகள் யாவும் இன்று மாறிய நிலையில் இருப்பார்கள். அந்த சமயத்தில் அவர்கள் உலகானுபவம் இல்லாத இளைஞர்களாய் எதைடம் நம்பும் சாதாரண மனதினராய் இருந்தனர். கடவுளுக்கு ஊழியம் செய்பவிரும்பினர். அவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மனைவியாக விரும்பினர் எனவே அவர்கள் முக மூடி அணியவும், உலகத்திலிருந்துவிடுபடவும், உற்றார் உறவினரை வெறுக்கவும், தாங்கள் மடத்துக்குள்ளாகவே இருக்கவும் ஒரு பட்டனர்.

ஆனல் காலச் சக்கரம் தனது மாறுதல்களை—மன சஞ்சலத்தை கொண்டுவந்தது. உடம்பை வருத்தக்கூடிய முறையில் உடைகளை உடுத்துவதும், கண்டிப்பானசட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பதும், இராக்காலங்களில் எழுந்து மண்டியிட்டு வணங்குவது அல்லது சிலுவை மாதிரியாக தரையில்படுப்பது போன்ற காரியங்கள் தான கடவுளை திருப்த்தி செய்யும் என்ற சந்தேகத்திற்கு வந்தனர். கிறிஸ்துவின் அன்பு என்றும், எண்ணம், மனே கற்பனை முன்போல் அவர்களது மனத்தை பரவசபடுத்த வில்லை. எப்பொழுதாவது ஒரு குழந்தை அவர்களுடைய கண்ணில் பட்டால் அவர்களுக்கு இயறகையாய் இருந்து வந்த பரமானந்தத்தை காணமுடியாது. இல்வாழ்க்கையில் வெறுப்புற்று சிறைவாய் பட்டு வாழும் கன்னி தனது பிரம்மைாகிய கிறிஸ்துவின் முத்தத்தை விரும்பியதை வெறுத்து தன்னை நேசிக்கக்கூடிய உண்மையான ஓர் மனிதனின் முத்தத்திற்கு ஆசைப்படுகிறான். அவன் தனது கழுத்தை கட்டியணைக்கும் குழந்தையின் கரங்களுக்கும் தன்முகத்தில் மோதக் கூடிய குழந்தை சுபாச ஸ்பரிசத்திற்தும் ஆசையுறுகிறான்.

(தொடரும்)

## திருமண அழைப்பு.

10-9-34ந் தேதி காலை 9 மணிக்கு காஞ்சிபுரம் திரு. வி. கமலநாத முதலியார் அரும்புதல்வன் பட்டண்ணு என்கிற வி. சின்னசாமிக்கும், வாலாஜாபேட்டை (லேட்) ஜி. துரைசாமி முதலியார் அரும்புதல்வி டி. மனோரஞ்சிதத்திற்கும் காஞ்சிபுரம் குயத் தெரு நெ. 68, (தாலுக்கச்சேரிக்கு அருகில்) "நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி. கல்யாண சுந்திர முதலியார் அவர்கள் அருந்தலைமையின் கீழ் நடைபெறும் என ராமசாமி முதலியார் எழுதுகிறார்.

## வாணியம்பாடியில் சீர்திருத்த நாடகம்.

சோலார் தங்கவயல் சமதர்ம நடிகர் சங்கத்தாரால் வாணியம்பாடியில் நடத்தப்பட்ட "பிராமணனும், சூத்திரனும்" என்னும் நாடகம் 28-7-34 தேதி வாணியம்பாடியில் சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவருக்கு ஷை நடிகர் சங்கத்தின் சார்பாகத் தோழர் அ. இரத்தினசபாபதி அவர்கள் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. நாடக இறுதியில் தலைவர் தோழர் ஈ. வெ. ராவசாமி அவர்கள் ஷை பத்திரத்திற்குப் பதில் கூறி "நாடகம்" என்பது பற்றிப்பேசினர்.


## உதவி நாடகம்.

ஈரோட்டில் பல சீர்திருத்த நாடகங்கள் நடத்திவந்த மதுரை பால ஷண்முகானந்த சபையார் ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்திற்கு உதவியாக 7-8-34ந் தேதி இரவு தோழர் சி. எ. அய்யாமுத்து அவர்கள் தலைமையிலும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆதரவிலும் ஈரோடு பார்க் பிக்சர் பாலெசில் "பதிபக்தி" என்னும் நாடகத்தை நடத்தினர்கள். நாடக இறுதியில் தோழர் அய்யாமுத்து அவர்கள் முடிவுரை கூறியபின் ஷை கம்பெனியால் வந்தனங் கூற நாடகம் முடிந்தது.

## பாராட்டுக் கூட்டம்.

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்திற்கு உதவியாக நாடகம் நடத்திக்கொடுத்த மதுரை பால ஷண்முகானந்த சபையாரைப் பாராட்டுவதற்கு 8—8—34-ந்தேதி ஷை சங்க ஹாலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத்தலைவர் டாக்டர் M. கிருஷ்ணசாமி, அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் S. V. லிங்கம், A. ரத்தின சபாபதி, M., A. ஈஸ்வரன், ப. ஜீவானந்தன், ஈ. வெ. இராமசாமிஆகியவர்கள் "நாடகம்" என்பது பற்றிப் பேசினாகள். தோழர் ராமசாமி அவர்கள் மேல்நாட்டு நாடகத்தையும், இந்தியநாட்டுநாடகத்தையும் ஒப்பிட்டுபேசினர்.பின் ஷை சபாவின் பிரதம நடிகர் தோழர் டி. கே. ஷண்முகம் அவர்களுக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒரு தங்கப் பதக்கம் பரிசளித்தார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

ரூ. 2—4—0க்கு 3 கெடியாரங்களும், 14 காரட் ரோல்டு கோல்டு நிப் உடன் ஒரு பவுண்டன் பேனவும் 132 வெகுமதிகளும்.




எங்கும் புகழும் பிரக்யாதியும் பெற்ற ரோஜா புஷ்ப வாசனை செண்ட் (அத்தர்) பாட்டல் 6க்கு விலை ரூ. 2-4-0. ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குகின்றவர்களுக்கு ஒரு ரயில்வே ரெகுலேட்டர் ஊமை (போலி) பாக்கட் கெடியாரமும், 5 ஷூ உத்திரவாதமுள்ளதும் கெட்டியான வேலைப்பாடமைந்ததுமான B-டைம்பீசும், ஒரு தங்க முலாம் பூசிய ஊமை (போலி) ரிஸ்ட் வாட்சும், ஒரு தங்க நிப்பு உள்ள பவுண்டன் பேனவும், ஒரு அழகானமுத்து மாலையும் 128 பலவித சாமான்களும் இனமாக அனுப்பப்படும்.

பாக்கிங் & தபால் கட்டணத்திற்கு அணு 0—14—0.

The American Commercial Store,
Post Box No. 12213 Calcutta (K)

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது விலை அணு 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணு 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்!

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

## குடி அரசு கலம்பகம்.

இந்நூலில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணு 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி செனிக்யூ அவர்கள் தன் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோசனகளும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணு 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணு 3.

## "மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இதில் நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பதுபோன்ற பல அறிய விஷயங்களைக்கொண்டதாகும். சுமார் 128 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 6.

இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 5.

## நான் நாஸ்திகன் ஏன்?

இப் புத்தகமானது தோழர் பகத்சிங்கு அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானர் என்பது பற்றியும் ஏன் நாஸ்திகரானர் என்பது பற்றியும் லாகூர் சதி வழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணு 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.) விலை அணு 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல். விலை அணு 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணு 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது. விலை அணு 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணு 4. அயோத்தியாகாண்டம் அணு 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணு 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணு 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணு 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணு 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணு 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணு. வேண்டுவோர் 1¼ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்த தலைமையுரையை ஒன்றாகத்திரட்டியதாகும். சமூக சீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் கையில் ஒவ்வொன்றுமிருக்க வேண்டியதவசியமாகும். விலை அணு 2.

## பர்னாட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னாஷ அவர்கள் அமெரிக்காவைப் பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணு 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை யொன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டவையாகும். விலை அணு ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணு 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணு 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணு 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணு 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணு 2.

## சோதிடப் புரட்டு

விலை அணு 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணு ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.